94

திருமலை மன்னர் - கையேடு

செ. போசு - வெ. வேதாசலம்

திருமலை மன்னர் - கையேடு

திருமலை மன்னர் - கையேடு

ஆசிரியர்கள்

செ. போசு, எம்.ஏ.
கல்வெட்டாய்வாளர்

வெ. வேதாசலம், எம்.ஏ.,
காப்பாளர்

பொதுப் பதிப்பாசிரியர்
நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர் (பொறுப்பு)

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-28
1984

முதற் பதிப்பு 1984
த. நா. தொ. பொ. ஆ. துறை
வெளியீடு எண். 94

© தொல்பொருள் ஆய்வுத்துறை

திருமலை மன்னர் - கையேடு

ஆசிரியர்கள்

செ. போசு, எம்.ஏ.,

வெ. வேதாசலம், எம்.ஏ.,

பொதுப் பதிப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.,

விலை ரூ.

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்தைவெளி, சென்னை - 600 028

பொருளடக்கம்

1.	மதுரை நாயக்கர் வரலாறு	1
2.	மதுரை நாயக்கருள் திருமலை மன்னர்	3
3.	சமயமும், கலையும்	14
4.	வெளிநாட்டு உறவு	33
5.	திருமலை நாயக்கரைப் பற்றிய முடிவுகள்	48
6.	அரண்மனை அரும்பொருட் காட்சியகம்	49

முன்னுரை

மாமன்னர் திருமலை மன்னனின் 400-வது பிறந்தநாள் விழாவை இவ்வாண்டு சீரோடும், சிறப்போடும் நடத்தத் தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது. தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களைப் புரவலராகவும், மாண்புமிகு முனு ஆதி, வேளாண்மை உயர்மட்டக் குழுத்தலைவர் அவர்களைத் தலைவராகவும்கொண்ட செயற்குழு மற்றும் பொதுக் குழு அமைக்கப்பெற்று விழாப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விழாத் தொடர்பாக மதுரை, திருமலைநாயக்கர் அரண்மனையில் உள்ள அரும்பொருட் காட்சியகம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

திருமலை மன்னர் வரலாறு பற்றியும், திருமலை நாயக்கர் அரண்மனை அரும்பொருட் காட்சியகம் பற்றியும், பொது மக்களும், அறிஞர்களும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில், ஒரு சிறு கையேடு தற்போது வெளியிடப்படுகிறது.

இந்நூலைக் கல்வெட்டாய்வாளர் திரு. செ. போசு, எம்.ஏ., காப்பாளர், திரு. வெ. வேதாசலம், எம்.ஏ., ஆகியோர் திறம்பட எழுதியுள்ளனர்.

இந்நூலை அச்சுப்பிரிவினர் அழகுற அச்சாக்கியுள்ளனர். கல்வெட்டாய்வாளர்கள் திருமதி ஆர். வசந்தகல்யாணி, எம்.ஏ., திரு. அ. இராசேந்திரன், எம்.ஏ., ஆகியோர் அச்சுப்பிழை திருத்தி உதவியுள்ளனர். அனைவருக்கும் எம் நன்றி.

24-6-84
சென்னை-28

நடன. காசிநாதன்
இயக்குநர் (பொறுப்பு)

மதுரை நாயக்கர் வரலாறு

கி.பி. 1336-இல் துங்கபத்திரை ஆற்றங்கரையில் தோற்றுவிக்கப்பெற்றது விசயநகரப்பேரரசு. இப்பேரரசின் பெருமன்னர்களாக விளங்கிய அரசர்கள் தமிழ்நாட்டையும், கர்நாடகத்தையும், ஆந்திரத்தையும் தங்களுக்குக் கீழடக்கி ஆண்டார்கள். கி.பி. 1509-இல் விசயநகர வேந்தராக அரியணையேறிய கிருட்டிணதேவராயர் தமிழ்நாட்டுப் பகுதியில் நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பங்களை ஒழித்தார். சோழநாட்டுப் பகுதிக்கு நரச நாயக்கரையும், பாண்டியநாட்டுப் பகுதிக்கு நாகம நாயக்கரையும் மண்டலேசுவரர்களாக அமர்த்தினார். நாகம நாயக்கர் மதுரையிலிருந்து விசயநகரவேந்தரின் ஆளுநராக மதுரைப் பகுதிகளை ஆண்டுவந்தார். இடையில் இக்காலத்தில் எழுந்த சிறு குழப்பத்திற்குப் பின்னர் நாகம நாயக்கரின் மகனாக விளங்கிய விசுவநாதநாயக்கர் விசயநகரப் பேரரசின் பிரதிநிதியாக கி. பி. 1559-இல் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்பட்டார்.

கி.பி. 1529-இல் தொடங்கிய இம்மதுரை நாயக்கர் ஆட்சி கி.பி. 1736 வரை நீடித்தது. விசுவநாத நாயக்கர் முதலாக மீனாட்சி ஈறாகப் பதின்மூன்று நாயக்க அரசர்கள் ஆட்சியை மேற்கொண்டு நடத்தினர். முதலில் ஆண்ட அறுவரும் விசயநகரப் பேர்ரசுக்குக் கீழ் அவர்களது ஆளுநர்களாகவே ஆட்சி நடத்தினர். அடுத்துவந்த எழுவரும் முழுவுரிமை பெற்ற மன்னர்கள் போன்று மதுரை நாட்டை ஆண்டார்கள்.

இந்நாயக்க மன்னர் காலத்தில் பல சமுதாய மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய பண்பாட்டுத் தாக்கங்கள் நிகழ்ந்தன. பழைய

மரபுகள் அழிந்துபோகாமல் காக்க முயற்சிக்கப்பட்டது. மதுரை நாயக்க மன்னர்கள் மதுரைப் பகுதியிலும் திருச்சிப் பகுதியிலும் செய்த சமயப்பணிகளும், கலைப்பணிகளும் பொதுப்பணிகளும் இன்றும் தமிழ்நாட்டு மக்களின் மனதில் அழியாத இடத்தைப்பெற்று விளங்குகின்றன.

o
ooo
o

மதுரை நாயக்கருள் திருமலைமன்னர்

மதுரையை ஆண்ட நாயக்க மன்னருள் மக்கள் மனதில் இன்றும் நிலைத்து இருப்பவர் இருவர். அவர்களுள் ஒருவர் பெண்ணரசியாக விளங்கிய இராணி மங்கம்மாள் ஆவார். மற்றொருவர் பெரும்புகழ் கொண்ட திருமலை நாயக்கர் ஆவார். இவர் மதுரை நாயக்கர் குலத்தில் ஏழாவது மன்னராக முப்பத்தொன்பதாம் வயதில் ஆட்சியேறினார். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிப்பீடத்தில் இருந்தார். தமது எழுபத்தைந்தாம் வயதுவரை ஆட்சிப்பீடத்திலிருந்து உயிர் நீத்தார்.

மதுரை நாயக்க மன்னருள் விசுவநாத நாயக்கரை அடுத்து அதிக ஆண்டுகள் ஆட்சிபுரிந்தவர் திருமலை நாயக்கர். மற்ற மதுரை நாயக்க மன்னர்களை வானத்து விண்மீன்கள் என்றால் திருமலை நாயக்கரை வானத்தில் பவனிவரும் வான்மதி எனலாம். மதுரை நாயக்கர் வரலாற்றில் முதன்முதலில் முழுவுரிமை படைத்த மன்னர் போன்று ஆளத் தொடங்கியவர் திருமலை நாயக்கரே. இவர் செய்த அறப்பணிகளும், கலைப் பணிகளும், சமயப்பணிகளும், பிற பணிகளும் பிற நாயக்க மன்னர்களைக் காட்டிலும் விஞ்சி நிற்பவையாய் விளங்கு கின்றன.

பண்பு நலன்

திருமலை மன்னர் வீரவுணர்வு மிக்கவர். வெம்புலியையும் வேட்டையாடச் சென்றவர். எதிலும் தொடர்ந்து போரிடும் மனவலிமை வாய்ந்தவர். போர்க்கோலம்பூண்டு போர்க்களத் திற்குச் சென்ற வீரர். இதனை மதுரை மாநகரில் புதுமண்ட

பத்து வாயிலில் காணும் இவரது உருவச்சிலை உணர்த்து கின்றது. கூனியூரில் வெளியிடப்பெற்ற செப்பேடுகள் அவரது வீரத்தைப் புகழ்ந்து கூறுகின்றன.

திருமலை மன்னர் சிறந்த சமயநெறியாளர். நாட்டில் நிலவிவந்த பண்புக்கும் மரபுக்கும் மதிப்பளித்தவர். இறைவனிடத்து இடையறாத ஈடுபாடு காட்டிய பக்தியாளர். வைணவமும், சைவமும் தழைத்தோங்கப் பாடுபட்ட சமயவாதி. வெளிநாட்டுச் சமயமும் வளர இடங்கொடுத்த சமயப் பொறையாளர். மாநகர் மதுரையை விழாநகராக மாற்றிய மாமன்னர். அவர் தன்னாட்சியில் கட்டி முடித்த கட்டடங் களும், கொட்டித்தந்த தானங்களும் இதனை உறுதிப்படுத்து கின்றன.

திருமலை மன்னர் அறிவும், ஆற்றலும், சுறுசுறுப்பும் கொண்டவர். தன்நாட்டின் நலனுக்காகக் களம் பல கண்டவர். நாட்டின் வருவாயில் மூன்றில் ஒருபங்கு விசயநகர வேந்தர்க்குச் செல்வதுகண்டு சுயாட்சி பெற அமர் நடத்திய தன்னாட்சியாளர். இதனை அவர் மேற்கொண்டு நடத்திய போர்கள் உணர்த்து கின்றன.

திருமலை மன்னர் சிறந்த அறநெறியாளர். நாட்டில் அவ்வப்போது எழுந்த சிக்கல்களுக்கு உடனுக்குடன் தீர்வு கண்டவர். தான் கண்ட அம்முடிவுகள் சில வேளைகளில் சரியில்லை என அறிந்ததும் அதனைத் திருத்திக் கொண்டவர். இதற்கு அவரது வரலாற்றில் சான்றுகள் பல உண்டு. அவர் வாழ்ந்த காலத்துச் சமுதாயத்தில் ஏற்றத்தாழ் வுகள் நிறைந்திருந்தபோதிலும் அவ்வேறுபாட்டை ஒழிக்க முயலும் வகையில் தீர்ப்பு வழங்கிச் செப்பேடு செய்தருளியவர்.

திருமலை மன்னர் சிறந்த அன்புள்ளம் கொண்டவர். தனது அதிகாரிகளிடம் ஆழ்ந்த நம்பிக்கைக்கொண்டவர். அவர்தம் தீரச்செயலை உரியவேளையில் உரியமுறையில் பாராட்டிப் பரிசுகள் பல அளித்தவர். போற்றத்தகுந்த செயல்கள் மக்களிடத்திலிருந்து வந்தபோதும் அதனை உரியமுறையில் பாராட்டி மகிழ்ந்தவர். வேட்டையாடச் சென்றவேளையில் தன்னைக் கொல்லவந்த புலியைக் கொன்றவனுக்கும், நாட்டில் புகுந்து குடிமக்களைக் கொன்றுலவிய புலியைக் கொன்ற வனுக்கும் கொடைகள் கொடுத்துச் சிறப்பித்த செம்மையாளர்.

திருமலை மன்னர் சிறந்த கலை ரசிகர். கலை விமர்சகர். கலையை வளர்த்தவர். கலைவல்லாரை மதித்தவர். கலைகளில் தன்னையும் மறந்து ஈடுபாடு காட்டியவர். கலைஞர்களுக்குப் பரிசுகள் பலவளித்துப் பாராட்டியவர். இவற்றிற்கு அவரது வரலாற்றிலே ஏராளமான எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. திருமலை சிறந்த கட்டடக்கலை வல்லுநர். பக்தியின் அடித் தளத்தில் அவர் எழுப்பிய இராயகோபுரங்களும், மண்டபங் களும், கோயில்களும் மற்றும் அவரது அரண்மனைகளும் இதனைப் பறைசாற்றித் திகழ்கின்றன.

திருமலை மன்னரின் பண்புநலன்களை இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

திருமலை நாயக்கர்

பிறப்பு	: கி.பி. 1584 பார்த்திப ஆண்டு, தைத் திங்கள் பூசநாள்
இறப்பு	: கி.பி. 1659 விளம்பி ஆண்டு, மாசி மாதம், நான்காம் நாள்
தந்தை	: முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர்

இயற்பெயர் : திருமலை சவுரி நாயினு அய்யிலுகாரு

ஆட்சியாண்டு : கி.பி. 1623 முதல் 1659 முடிய

தேவியர் : தோணியம்மை
உருத்திராபதி

தமையன் : முதலாம் முத்துவீரப்ப நாயக்கர்
குமார முத்து திருமலை

மகன் : இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர்

ஆசிரியர் : இரகுநாத பண்டிதர்
அக்கசவாசி
பெத்தவராயதீட்சா சுவாமிகள்

பட்டப்பெயர்கள் : திருமலைபூபன்
பரராசசேகரன்
பரராசபூஷணன்
தவநெறியேற்றவன்
சத்தியவாசகன்
சொக்கநாதர்க்கு முக்கிய குணவான்
பூலோகர்புரந்தரன்
பூர்வதெக்ஷ்ணன்
முத்தமிழ் விநோதன்
சிவநெறி தழைக்கத் திருநீறு இட்டவன்

அதிகாரிகள் தலைவர்கள்

தளவாய் : இராமப்பய்யன்

இராயசம் : ஆரணி வேங்கட்டராயர்

பாளையப்பட்டு தலைவர்கள்

அரங்கண்ண நாயக்கர் — கன்னிவாடி

தூங்காதேவன்	— திடியன்
ஆண்டித்தேவன்	— விக்கிரமங்கலம்
இருளப்ப கவுண்டன்	— கொங்கர்புளியங்குளம்
இம்முடிகனகராமய கவுண்டன்	— வெள்ளியங்குன்றம்
சூரியதேவன்	— நல்லமறம்
வெள்ளைய நாயக்கன்	— கொட்டாணிப்பட்டி
முத்துஅழகிரி	— திருச்சி ஆளுநர்

நாயக்கர் காலப் பதவிகள்

மதுரை நாயக்கர் அரசின் நிர்வாகத்தைப் பல்வேறு அதிகாரிகள் இருந்து கவனித்து வந்தனர். இவர்கள் தளவாய், பிரதானி, இராயசம், தானாபதி, சீமைதளகர்த்தர் என்று அழைக்கப்பட்டனர். தளவாய் என்பது அமைச்சர் பதவியும் படைத்தலைவர் பதவியும் இணைந்த ஒரு பதவியாகும். பிரதானி என்பது நிதியமைச்சர் பதவியாகும். இராயசம் என்பது நாட்டின் நிர்வாகத்தைக் கவனித்துவந்த செயலர் பதவியாகும். தானாதிபதி வெளிநாட்டுச் செயலர் பதவியாகும். மதுரை நாயக்கர் மதுரை மண்டலத்தைத் திருநெல்வேலிச்சீமை, திருச்சிராப்பள்ளிசீமை, சத்தியமங்கலச்சீமை என்று பல பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். அவற்றை நிர்வகித்து வந்த ஆளுநர் சீமைத்தளகர்த்தர் (Governor) என அழைக்கப்பட்டனர்.

திருமலை நாயக்கர் ஆட்சிப் பகுதிகள்

மதுரை மாவட்டப் பகுதிகள்

இராமநாதபுர மாவட்டப் பகுதிகள்

திருநெல்வேலி மாவட்டப்பகுதிகள்

திருவாங்கூர்ப் பகுதிகள்

திருச்சி மாவட்டப் பகுதிகள்

புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகள்

சேலம் மாவட்டப் பகுதிகள்

கோவை மாவட்டப் பகுதிகள்

தலைநகரம்

கி. பி. 1634 வரை திருச்சி

கி. பி. 1634க்குப் பிறகு மதுரைக்கு மாற்றப்பட்டது

தலைநகர் மாற்றம்

திருமலை நாயக்கர் மதுரையை மீண்டும் தலைநகர் ஆக்கியமைக்கு அவருக்கு ஏற்பட்ட நோய் நீங்கியமையே காரணம் என்பர். ஆனால் அதற்கு உண்மையான காரணம் அதுவாக மட்டும் இருக்கமுடியாது. வேறு காரணங்கள் பல இருக்க வேண்டும். மதுரை, நாட்டின் மையப்பகுதியில் அமைந்திருந்தது. திருச்சியைப் போன்று எளிதில் பகைவர் தாக்குதலுக்கு எட்டாது இருந்தது. தொன்மைச் சிறப்பும், சமயச்சிறப்பும் வாய்ந்த பெருநகராக இருந்தது. இவையே மதுரையைத் திருமலைநாயக்கர் மீண்டும் தலைநகராக மாற்றியமைத் தமைக்குக் காரணங்களாக இருந்திருக்கவேண்டும் எனலாம்.

தளவாய் இராமப்பய்யன்

இவர் திருமலை மன்னரின் புகழ்பெற்ற படைத்தலைவர் ஆவார். திருமலை நாயக்கர் நடத்திய போர்களில் எல்லாம் பெரும் பங்குகொண்டு திருமலை மன்னருக்கு வெற்றியை ஈட்டித் தந்தவர். இவர் மதுரைக்கு அருகேயுள்ள சதுர்வேதி மங்கலம் எனப்படும் கூத்தியார்குண்டு என்ற ஊரில் பிறந்தவர். சிறந்த சிவபக்தர். கூத்தியார்குண்டில் இவர் கட்டிய சிவன்

கோயிலில் திருமலை நாயக்கரின் திருவுருவச்சிலையும் இவரது உருவச்சிலையும் உள்ளன.

இராமப்பய்யன் பெயரில் அம்மானை என்ற வாய்மொழி இலக்கிய நூல் ஒன்று கிடைத்துள்ளது.

திருமலை நாயக்கர் காலத்தில் இராமப்பய்யன் மேற் கொண்டு நடத்திய போர்கள் பற்றி இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.

திருமலை மன்னர் நடத்திய போர்கள்

மைசூர்ப் போர் : இப்போர் கி. பி. 1633-இல் நடை பெற்றது. மைசூரை ஆண்ட சாமராஜ உடையார்க்கும் திருமலை நாயக்கருக்கும் நடந்த போராகும். இதில் நாயக்கர் படை மைசூர் வரை சென்று வெற்றிவாகை சூடியது.

திருவாங்கூர்ப் போர் : கப்பம் கட்டத் திருவாங்கூர் மன்ன ரான உண்ணி கேரளவர்மா மறுத்தமையால் இப்போர் நடைபெற்றது. இராமப்பய்யர் திருவாங்கூர் மீது படை யெடுத்துச் சென்று வெற்றியை நாயக்கருக்கு ஈட்டித் தந்தார்.

சேதுபதியுடன் போர் : இப்போர் 1637க்கும் 1645க்கும் இடையில் நடைபெற்றது. மறவர் நாட்டில் நடைபெற்ற உள் நாட்டுக் குழப்பத்தை அடக்க நடைபெற்றது. முடிவில் இரகுநாத தேவர் மறவர் நாட்டின் மன்னரானார். மறவர் நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டது.

விசயநகர வேந்தருடன் போர் : இது விசயநகர வேந்தரான மூன்றாம் ஸ்ரீரங்கர் தன்னைச் சிறைப்படுத்த முயன்ற போது

திருமலை நாயக்கர், தஞ்சை நாயக்கருடன் நடத்தியபோராகும். முடிவில் இருதரத்தாரும் சமாதானம் செய்து கொண்டனர்.

செஞ்சிப் போர் : கோல்கொண்டா சுல்தான் செஞ்சியை முற்றுகையிட்டமையால் செஞ்சி நாயக்கருக்கு உதவ இப்போர் நடைபெற்றது. முடிவில் செஞ்சி 1648-இல் பகைவர் கையில் வீழ்ந்தது.

மைசூர் மூக்கறுப்புப் போர் : கி. பி. 1656-இல் மைசூர் மன்னரான கந்திருவ நரசராஜாவுக்கும், திருமலைக்கும் நடந்த போராகும். மைசூர் மன்னன் கட்டளைப்படி நாயக்கர் நாட்டு வீரர்கள், குடிமக்கள் ஆகியோரது மூக்கை மைசூர்ப் படை வீரர்கள் அறுத்தனர். இதற்குப் பழிவாங்கும் வகையில் நாயக்கர் நாட்டில் புகுந்த மைசூர்ப் படையை முறியடித்து மைசூர்க்காரரது மூக்குகளை அறுத்துத் திருமலைக்கு வெற்றியை தேடித்தந்தவர் திருமலை சேதுபதி ஆவார்.

கோட்டைகள்

திருமலை நாயக்கர் காலத்தில் கீழ்க்கண்ட ஊர்களில் காவல் நிறைந்த கோட்டைகள் இருந்ததாக டெயிலர் பாதிரியார் அவர்கள் பதிப்பித்துள்ள கையெழுத்துப் பிரதி குறிப்பிடு கின்றது.

திண்டுக்கல்	தாராபுரம்
கோயம்புத்தூர்	தணைநாயக்கன்கோட்டை
சத்தியமங்கலம்	அந்தியூர்
ஈரோடு	காங்கயம்
விசயமங்கலம்	கருவூர்
நாமக்கல்	சேந்தமங்கலம்

சேலம்	ஓமலூர்
சங்ககிரி	சாமப்பள்ளி
ஆத்தூர்	ஆனந்தகிரி
பரமத்தி	அரவக்குறிச்சி
மோகனூர்	

அரசவருவாய்

திருமலை நாயக்கருக்குப் பல்வேறு வழிகளிலிருந்தும் வந்த வருமானம் ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாய் என்று நெல்சன் அவர்கள் கணக்கிட்டுக் கூறியுள்ளார். பேராசிரியர் சத்தியநாதையர் அவர்கள் தொண்ணூற்றொரு லட்சம் திருமலை நாயக்கரது அரச வருவாயாக இருந்திருக்கவேண்டும் என்று கருதுகின்றார்.

குலச்சின்னம், கொடி, முத்திரை

திருமலை நாயக்கரின் குலச்சின்னம் மரத்தினடியில் அமர்ந் திருக்கும் காளையாக இருக்கலாம். இதுவே அவரது கொடி யாகவும், முத்திரையாகவும் விளங்கிற்று போலும்.

மதுரை, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களுக்கு அளிக்கப்பட்ட கொடிமரங்களில் இவற்றைக் காணலாம். இக்கொடிமரத்தின் அடிப்பகுதியில் ஒருபுறம் மரத்தினடியில் அமர்ந்திருக்கும் காளையின் உருவம் காணப் படுகின்றது. இதனுடன் திரிசூலமும், சூரியன், சந்திரன் ஆகிய வற்றின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. மற்றொரு புறம் விசயநகர வேந்தர்களின் குலச்சின்னம் பொறிக்கப் பட்டுள்ளது. இதில் நிற்கும் நிலையிலுள்ள பன்றியின் உருவம் உள்ளது. இதன் எதிரே கவிழ்ந்த நிலையிலுள்ள

கட்டாரியும், மேலே சூரியன், சந்திரன் ஆகியவற்றின் உருவங்களும் காணப்படுகின்றன.

காசுகள்

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் பாண்டியர்களைக் காட்டிலும் மிகச்சிறிய வடிவில் செம்பாலான காசுகளை வெளியிட்டுள்ளனர். அவற்றில் 'வி', 'சொ', 'தி' போன்ற தங்களது பெயரின் முதல் எழுத்தினையும் காளை, கந்தன், சந்திரன், சூரியன், கத்தி, விநாயகர், சங்கு, தேவி முதலிய உருவங்களையும் பொறித்து வெளியிட்டுள்ளனர். இவற்றுள் திருமலை நாயக்கர் வெளியிட்டது என்று கருதப்படும் காசின் ஒருபுறம் கத்திக்கு முன்பாக நிற்கும் காளையின் உருவமும், மதியின் உருவமும் காணப்படுகின்றன. மற்றொருபுறம் நிற்கும் நிலையிலுள்ள உருவம் ஒன்று காணப்படுகின்றது. இவ்வுருவத்திற்கு அருகில் 'தி' என்று தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதேபோன்று 'தி' என்ற தெலுங்கு எழுத்து ஒருபுறமும் மற்றொருபுறம் மீனாட்சியின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ள செப்புக் காசுகள் மதுரைப் பகுதியில் கிடைத்துள்ளன.

திருமலை நாயக்கர் காலத்து மன்னர்கள்

விசயநகர வேந்தர்கள்	:	இரண்டாம் வேங்கடர்
		மூன்றாம் ஸ்ரீரங்கர்
தஞ்சை நாயக்கர்	:	இரகுநாத நாயக்கர்
		விசயராகவ நாயக்கர்
செஞ்சி நாயக்கர்	:	கிருஷ்ணப்ப நாயக்கர்
வேலூர் நாயக்கர்	:	இலிங்கம நாயக்கர்
மைசூர் மன்னர்	:	சாமராச உடையார்

		கண்டீரவநரச ராசா
சேதுபதிகள்	:	கூத்தன் சேதுபதி
		இரண்டாம் சடைக்கத்தேவர்
		(தளவாய் சேதுபதி)
		தம்பி சேதுபதி
		இரகுநாததேவர்
		(திருமலை சேதுபதி)
திருவாங்கூர் மன்னர்	:	உண்ணிகேரளவர்மா

★

ச ம ய மு ம் க லை யு ம்

திருமலை நாயக்கர் திருவுருவம் உள்ள இடங்கள்

மன்னார்கோவில்
அழகர்கோயில்
கூத்தியார்குண்டு
திருப்பரங்குன்றம்
திருப்புவனம்
மதுரை
ஸ்ரீவில்லிப்புத்தூர்
ஸ்ரீரங்கம்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில்

அம்மன் கோயில் திருச்சுற்று
முக்குறுணிப்பிள்ளையார் திருவாசி விளக்கு
இராயகோபுரம்
புதுமண்டபம்

ஸ்ரீவில்லிபுத்தூரில்

ஆண்டாள் கோயில் மகாமண்டப வெள்ளிக்குரடு
வசந்த மண்டபம்

மேலே காணும் இடங்களில் காணப்படும் திருமலை நாயக்கர் உருவச்சிலைகளில் பெரும்பாலானவை, ஆண்டவனை வணங்கி நிற்கும் அடியவராகவே வடிக்கப்பட்டுள்ளன. புது மண்டபம் வாயிலில் காணப்படும் உருவச்சிலை மட்டும் திருமலை மன்னர் போர்க்கோலம்பூண்டு, புரவியேறிப் பாய்ந்து செல்லும் நிலையிலுள்ளது. இவற்றில் சில அணிகலன்கள்

பூண்ட அரசகோலத்திலும் இன்னும் சில எளியமுறையிலும் காணப்படுகின்றன. பெரும்பாலானவை கல்லிலும், சில செம்பிலும், சில தந்தத்திலும் செய்யப்பட்டுள்ளன.

திருமலை நாயக்கரின் கட்டிடத் திருப்பணிகள்

அழகர்கோயிலில்	:	திருமலை நாயக்கர் மண்டபம்
		திருமலை நாயக்கர் உருவச்சிலைகள் உள்ள திருச்சுற்று
திருப்பரங்குன்றத்தில்	:	குடைவரைக் கோயில் முன்மண்டபம்
திருப்புவனத்தில்	:	தற்போது சிதைந்துவிட்ட திருமலை நாயக்கர் மண்டபம்
மதுரையில்	:	திருமலை நாயக்கர் அரண்மனை
		புதுமண்டபம்
		இராயகோபுரம்
		நவராத்திரி கொலுமண்டபம்
		முக்குறுணிப்பிள்ளையார் கோயில்
		மாரியம்மன் தெப்பக்குளம்
ஸ்ரீவில்லிப்புத்தூரில்	:	ஆண்டாள் கோயில் வெள்ளிக்குரடு
		திருமலை நாயக்கர் அரண்மனை
		வசந்தமண்டபம்

இராயகோபுரங்கள்

திருமலை நாயக்கர் தனது ஆட்சிப் பகுதியில் ஊட்டத்தூர் முதல் குமரி வரையிலிருந்த ஊர்களில் இருந்த அறுபத்து நான்கு கோயில்களின் முன்பு இராயகோபுரம் கட்டத் திட்டமிட்டு அடித்தளமும் இட்டார். ஆனால் எக்காரணத்தினாலோ அவை குறைப்பணியாக முற்றுப்பெறாமல் நின்று, இன்று மொட்டை கோபுரங்களாகக் காட்சி அளிக்கின்றன.

கட்டடத் திருப்பணியின் சிறப்பு

திருமலை மன்னன் காலத்தில் கட்டடத் திருப்பணி எப்படிச் செய்யப்பட்டது என்பதை மதுரைக்கோயில் திருப் பணிமாலை தெரிவிக்கின்றது. அரைத்த சுண்ணாம்பில் வெல்லச் சாறு, கடுக்காய், ஆமலகம், தான்தோன்றிக்காய், ஆகியவற்றின் சாற்றைவிட்டு எக்காலத்திலும் அசையாத வச்சிரம் போன்று காரை வைத்துக் கட்டடங்கள் கட்டப்பட்டன எனத் தெரி விக்கின்றது:

உரக்கவெகு ரொக்கம் கொடுத்துப் படங்குதூண்
உத்திரம் முதல் பழங்கல்
ஒடிந்தன பிடுங்கி நவமாய் அமைத்துக்
காரையோடு சீரணம் அகற்றி
அரைத்த சுண்ணாம்பை வெல்லச் சாறுவிட்டு
நன்றாய்க் குழைத்து செங்கலும்
அடுக்காகப் பரப்பிப் கடுக்காயோடு ஆமலகம்
அரியதான் தோன்றிக்காய் உளுந்து
ஒருகால் இருகால் இடித்து நன்னீரினில்
ஊறிய கருஞ்சாறும் விட்டு
ஊழிக்கா லங்களிலும் அசையாத வச்சிரக்
காரைவிட் டோங்கும் அம்மை
சிரக்காலம் வாழவே மீனாட்சி கோயிலும்
செப்ப மிடுவித்து நன்றாய்ச்
செய்வித்த புண்ணியம் சதகோடி புண்ணியம்
திருமலை மகீபனுக்கே.

—மதுரைக்கோயில் திருப்பணிமாலை

திருமலை மன்னர் அளித்த கலைப் பொருட்கள்

செம்பினாலானவை:

மீனாட்சியம்மன் கோயில் முக்குறுணிப் பிள்ளையார் திருவாசி விளக்கு

சுவாமி, அம்மன் சன்னதி வாயில் துவாரபாலர்கள்

புதுமண்டபம் மாதிரியமைப்பு

மதுரைக் கோயிலில் உள்ள சில செப்புத் திருமேனிகள்

மதுரை, பரங்குன்றம் கோயிலிலுள்ள கொடிக்கம்பங்கள்

தந்தத்தாலானவை:

ஸ்ரீரங்கத்திலுள்ள உருவச்சிலைகள்

அழகர்கோயிலிலுள்ள பள்ளியறை விமானம்

மரத்தாலானவை:

மீனாட்சியம்மன் தேர்

சொக்கர் தேர்

மதுரைக் கோயில் பணியில் சீரமைப்பு

திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராக்கியதும் கோயில் பொறுப்புக்களை அபிசேகப்பண்டாரத்திடமிருந்து பெற்றார். நாட்டு வருவாயிலிருந்து இலட்சம் பொன்னுக்கு ஆயிரம் பொன் வீதம் இறைவழிபாட்டிற்கும்; நாற்பதினாயிரம் பொன் விழாக்களுக்கும் எழுதிவைத்தார். மதுரைக்கோயிலில் வழிபாடு நடத்திவந்த விக்கிரமபாண்டிய பட்டர் வகைக்கும் குலசேகரபாண்டிய பட்டர் வகைக்கும் இருந்த வேறுபாடுகளை நீக்கி அவர்கள் செய்யவேண்டிய செயல்களை வரையறுத்து வைத்தார். இதன்படி விக்கிரமபாண்டிய பட்டர் வகையினர் கருவறையில் செய்யவேண்டிய காரியங்களைச் செய்தனர். குலசேகரபட்டர் வகையினர் உற்சவமூர்த்திகளுக்குச் செய்ய

வேண்டிய காரியங்களைச் செய்துவந்தனர். முதல் பதினாலு நாட்களுக்கு விக்கிரமபாண்டிய பட்டர் வகையினரும் அடுத்த பன்னிரெண்டு நாட்களுக்குக் குலசேகரபாண்டிய பட்டர் வகையினரும் கோயில் காரியங்களைக் கவனித்து வந்தனர்.

கோயில் மரியாதையில் முதல்மரியாதை விக்கிரம பாண்டியபட்டர் வகைக்கும், அடுத்து குலசேகரபட்டர் வகைக்கும் கிடைத்தது. திருவிழாக் காலங்களில் இருந்த கட்டளைகள் இருவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப் பட்டன. கருவூலங்களில் இருந்த பொருள்களைக் கணக்கிட வகைக்கு ஒருவராக இருந்து கணக்கிட்டனர். பிறகு, முதலில் தாமே கவனித்துவந்த தனது கட்டளைகளுக்குப் பூவணநாத பண்டாரத்தை அலுவலராக ஆக்கினார். இவற்றைக் கண் காணிக்கத் தனது குருவாகிய பெத்தவராய தீட்சிதர் சுவாமி களை நியமித்தார்.

அளித்த ஆபரணங்கள்

மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்திற்குத் திருமலை மன்னர் கீழ்க்கண்ட பொன், முத்து, நவரத்தினங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அளித்துள்ளார்.

இரத்தினக்கொண்டை	திருக்கலியாணமுடி
நீலநாயகப்பதக்கம்	குதிரை இரத்தின அங்கவடி
வீரகண்டை	இருதலைப் பட்சிப் பதக்கம்
இரத்தின சூரியகாந்திப் பூ	இரத்தின வெண்டயம்
நாகர் ஒட்டியாணம்	குசாந்தரப் பதக்கம்
துரைப் பதக்கம்	சங்குசக்கரப் பதக்கம்
குதிரை வாகன தலைமுடிப்பாகை	

இரத்தினச் செங்கோல்	பள்ளியறைக் காளாஞ்சி
சொர்ணக்கும்பா	பவளக்கொடிமாலை

தானம் தந்த ஊர்கள்

மதுரைக் கோயிலில் நாள்வழிபாடும், விழாக்களும் நடைபெறுவதற்கு 12,000 பொன் வருமானம் அளிக்கக்கூடிய கீழ்க் கண்ட ஊர்களைத் திருமலை நாயக்கர் தானமாகத் தந்துள்ளார். இதேபோன்று அழகர் கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம் முதலிய பெருங்கோயில்களுக்கும் ஆங்காங்கே இருந்த பல சிறுகோயில்களுக்கும் பல அறக்கொடைகளை அளித்துள்ளார்.

இராவதநல்லூர்	வலையப்பட்டி
தொட்டியப்பட்டி	நெடுமதுரை
கொம்பட்டி	வலையன்குளம்
பெரிய ஆலங்குளம்	ஒன்றையாலங்குளம்
சொக்கநாதன் பட்டி	ஆண்டிப்பட்டி
தாதன்பட்டி	சின்னநாயக்கன் பட்டி
போடிநாயக்கன் பட்டி	கொண்டையன் பட்டி
தும்பிச்சிநாயக்கன் பட்டி	சம்பகுளம்
விராலிப் பட்டி	சின்னிமங்கலம்
சடைச்சிப் பட்டி	

திருவிழாக்கள்

மதுரை மாநகரைத் திங்கள்தோறும் விழாக்கள் நிறைந்து விளங்கும் விழா நகரமாக மாற்றிய பெருமை மன்னர் திருமலை நாயக்கருக்கு உண்டு. சித்திரைத் திருவிழா, நவராத்திரி விழா,

வசந்த விழா திருவிளையாடல்கள் போன்ற விழாக்கள் இவர் காலத்தில் சிறப்பாக நடைபெற்றன.

சித்திரைத் திருவிழா

மதுரையில் திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பாக திருக்கல்யாணமும், தேரோட்டமும் மாசி மாதத்திலேயே நடைபெற்றன. இவ்விழாக்களைச் சித்திரை மாதத்திற்கு நாயக்கர் மாற்றி வைத்தார். மேலும் சித்திரைப் பௌர்ணமி நாளில் தேனூர்வரை வந்துசென்ற திருமாலிருஞ்சோலை அழகரை இந்நாளில் மதுரைக்கு வந்துபோகும்படி செய்தார். இதனால் மதுரையில் திருக்கல்யாணம், தேரோட்டம், ஆற்றில் அழகர் இறங்குதல் முதலிய நிகழ்ச்சிகள் சித்திரை மாதத்தில் அடுத்தடுத்து நடைபெற்றன. இதனால் மதுரை மாநகர் இச்சித்திரைத் திருநாட்களில் பெரும் விழாக்கோலம் பெற்று வருகின்றது.

வசந்த விழா

திருமலை மன்னர் வைகாசித் திங்களில் நடைபெற்ற இவ்விழாவைத் தான் கட்டிய புதுமண்டபத்தில் நடத்தச் செய்தார். இந்நாட்களில் புதுமண்டபத்தைச் சுற்றிலும் உள்ள சிறு அகழியில் நீரை நிறையச் செய்து வெப்பம் நிறைந்த கோடையில் அங்கயற்கண்ணி, ஆலவாய் அழகர் மனங்குளிர இம்மண்டபத்தில் எழுந்தருளச்செய்து வசந்த விழா நடத்தினார்.

நவராத்திரி விழா

புரட்டாசித் திங்களில் தனது அரண்மனையை அழகாக அலங்கரித்தார். நாயக்கர் இந்நாட்களில் பல்வேறு கோலங்கள் பூண்டு அரியணையில் அமர்ந்திருப்பார். இதுபோன்று அங்கயற்

கண்ணி அம்மைக்கும் நவராத்திரி கொலுமண்டபம் கட்டுவித்து இந்நாட்களில் பல்வேறு கோலங்களில் அம்மனை அலங்கரித்துக் கொலுவிருக்கச் செய்தார். அங்கு இக்கொலுமண்டபத்தைத் தொழுதுநிற்கும் நிலையில் தனது உருவத்தைத் தேவியருடன் வடித்து வைத்தார்.

திருவிளையாடல்கள்

திருமலை நாயக்கர், சொக்கர் மதுரையில் நடத்திய அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் நடத்திக்காட்ட ஏற்பாடு செய்தார். இதன்படி சித்திரைத் திருவிழாவில் ஒன்பதாம் நாள் திக்கு விசயமும், பத்தாம் நாள் திருக்கல்யாணமும், குண்டோதரனுக்கு அன்னமிட்ட திருவிளையாடல்களும் நடத்தப்பட்டன. ஆவணி மாதத்தில் கரிக்குருவிக்கு உபதேசித்தது, நாரைக்கு முக்தியளித்தது, நவமணி விற்றது, தருமிக்குப் பொற்கிழி அளித்தது, அங்கம் வெட்டியது, வளையல் விற்றது, குதிரை கயிறு மாறியது, பிட்டுக்கு மண் சுமந்தது, விறகு விற்றது போன்ற திருவிளையாடல் நிகழ்ச்சிகள் நாளுக்கு ஒன்றாக நடத்தப்பட்டன.

தெப்பத் திருவிழா

திருமலை நாயக்கர் தான் பிறந்த தைப்பூச நாளில், தான் கட்டிய தெப்பக்குளத்தில் அங்கயற்கண்ணியையும் ஆலவாய் அழகரையும் தெப்பத்தில் மிதக்கவிட்டுத் தெப்பத்திருவிழா நடத்தினார். இவ்விழாவில் அவரும் பங்குகொண்டு இத் தைத் திங்களில் கல் யானைக்குக் கரும்பு கொடுத்தது, வலை வீசியது, யானை எய்தது போன்ற திருவிளையாடல்களை நடத்த ஏற்பாடு செய்தார்.

செங்கோல் விழா

திருமலை நாயக்கர் ஆண்டுதோறும் வரும் சித்திரைத்

திருவிழாவின் எட்டாம் நாள் அங்கயற்கண்ணி அம்மைக்கு முடிசூட்டி, அம்மையிடமிருந்து செங்கோலைப் பெற்று, வீதி வலம் வருவார். அதன் பிறகு அலங்கரித்த அரண்மனை அரியாசனத்தில் அதனை வைத்து இரவு முழுவதும் அதனருகே அமர்ந்திருப்பார். செங்கோலுக்குச் சிறப்புகள் செய்யப்பட்டு மறுநாள் அங்கயற்கண்ணி ஆலயத்துக்கு அதனை எடுத்துச் சென்று அன்னையின் காலில் வைத்து வணங்குவது வழக்கம். திருமலை மன்னர் அங்கயற்கண்ணியின் அடியாராக நாட்டை ஆள்வதை இவ்விழா குறித்தது. அவர் செங்கோல் வாங்கும் நிகழ்ச்சி பின்வருமாறு ஸ்ரீதளபுத்தகத்தில் எடுத்துரைக்கப் படுகின்றது.

"துரைகள் செங்கோல் வாங்குகிறபோது நடக்கிற சட்டம் எப்படியானால் சகாத்தம் 1544-க்கு மேற் செல்லாநின்ற துந்துபி வருடம் வரைக்கும் செங்கோலை மூலஸ்தானத்துக்கும் சாத்திவித்து துரைகள் வாங்கிவருவார்கள். அப்பால் திருமலை சவுரிஅய்யன் நாளையில் ஸ்தலம் பிரபலமாகி உற்சவங்களும் உண்டுபண்ணி வைத்ததன்பேரில் சித்திரை மாதம் எட்டாம் நாள் திருநாள் காலமே ஸ்தானிகள் இருவகைப்பட்டமாரும் ராஜா சமூகத்தில் அறியபண்ணுவிக்கிறது. உடனே துரையவர்கள் ஸ்நானபாவம் பண்ணி ஆசாரமாய் உபவாசமிருந்து தீபம் வைத்தவுடனே சுவாமிக்கு அலங்காரமாகி அம்மன் கோவில் ஆறுகால் பீடம் அலங்காரம் பண்ணி அந்த மண்டபத்தில் ரத்தின சிம்மாசனத்தில் எழுந்தருளப் பண்ணுவித்து, அநேக தீவட்டிகள், ஆடல் பாடலுடனே மேளவாத்தியங்களும் சோபிதமாய் எழுந்தருளிப் பட்டாபிஷேகத்துக்குச் சுவர்ண கும்பத்தில் திருமஞ்சனம் அனந்தகுண சதாசிவப்பட்டர் விதிப்படி மந்திரகர்மங்கள் நடப்பிப்பார்கள். ஸ்தானீகாள் ஏழுபேரும் கருவூலம் ஆபரணப் பெட்டியைத்திறந்து பட்டாபிஷேக கிரீடமும், செங்கோலும், கெட்டி முதலிவகை, தற்புருஷ

தேவமுதலி பெரிய தேவமுதலிக்கு ஒருவர் மகரமுத்திரையும், ஒருவர் மகரக்கொடியும், விழுப்பாதராயனுக்குப் பொன்னெழுத் தாணியும் பாண்டிநாட்டு முதலியாருக்கு ரிஷப முத்திரையும், கேசவத்தீக்ஷதரய்யருக்கு நாகர முத்திரையும், இவ்வளவும் திருவாபரணத் தட்டிலே எடுப்பிவித்துக்கொண்டு, ஸ்தானீகள் சங்கீத மேளத்துடனே வருகிறது. வந்தவுடனே அம்மன் சமட் சமத்திலேவைத்து நம்பியார் பூசை பண்ணி உடனே பட்டாபி ஷேகமும் நடந்து இருவகைப்பட்டமாரும் கிரீடமும் செங்கோலும் சாத்துவித்து நெய்வேதனமுமாகி இருக்கும் உடனே கட்டியங்காரரைச் சமயம் வரலாமென்று ஏவின சுவாமி யிடத்தில் அறியபண்ணுவித்த மாத்திரத்தில் அவுதாஅம்பாரி அலங்காரம் பண்ணியிருக்கிற பட்டத்து ஆனையின் மேலேறிக் கொண்டு எழுபத்திரண்டு பாளையப்பட்டுத் துரைமக்களும் அவரவர் விருதுகளுடனே சனங்களுடனே ஆயுதபாணிகளாய்ப் பதினெட்டு வகை மேள வாத்தியங்களுடனே அநேக தீவட்டி, பகல்வத்தியுடனே வாணவித்தைகள், நாடகசாலைப் பெண்கள், கேளிக்கையுடனே துரையவர்கள் செங்கோல் வாங்க கோயிலுக்கு வருகிற வைபவம் எழுதி முடியாது.

உடனே கோவில் வாசலில் வந்து யானையை விட்டிறங்கிச் சகல சம்ப்ரமத்துடன் ஆறுகால்பீடம் வந்துசேர்வார்கள். அங்கு அம்மனுக்குச் சோடச உபசார தீபாராதனை நடக்கும். தெரிசனமானவுடனே இருவகையில் பட்டமாரும் விபூதி முதலான பிரசாதம் கொடுத்து, சுவாமிக்குச் சாத்தியிருக்கிற நிலைமாலையும், இரட்டைமாலையும் எடுத்து துரைக்குச் சமர்ப்பிவித்து சாதாரப்பரிவட்டம் இரட்டைப்பரிவட்டம் கட்டிச் செங்கோலையும் எடுத்துக் கையில் கொடுப்பார்கள். பின்னர் ஸ்தானீகாள் முதலான ஏழுபேருக்கும் சந்நிதானத்தில் விபூதி பிரசாதம் சந்தனம் கொடுத்து அவரவர் முத்திரைகளை எடுத்து இருவகைப்பட்டமாரும் அவரவரிடத்தில் கொடுப்

பார்கள். அவரவர் அதை வாங்கிக்கொண்டு துரையுடனே சந்நிதி வாசலுக்கு வந்து யானைமேற்கொண்டு பட்டணப் பிரவேசம் வருவார்கள்.''

வேற்றூர்களில் செய்த அறக்கொடைகள்

திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தன்னாட்டில் இருந்த பலகோயில்களுக்கும், சமூகத்தில் உயர்ந்த சிலருக்கும் பொருள்கொடையும், நிலக்கொடையும் அளித்துள்ளதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. பின்வரும் அறக்கொடை களை அவர் காலத்தில் ஆங்காங்கே பொறித்த கல்வெட்டுக் களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயிலுக்குக் காரிச்சேரி என்ற ஊர் தானமாகத் தரப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் கூனியூரில் இருந்த அந்தணர் களுக்கு முத்துக்கிருஷ்ணபுரம் என்ற ஊர் தானமாகத் தரப் பட்டது.

சேலம் மாவட்ட கபிலமலைக் கோயிலுக்கு நிலம் தான மாகத் தரப்பட்டது.

பூங்குறிச்சி மேலாம்பூரில் வரிகள் கோயிலுக்குத் தானமாக அளிக்க ஆணையிடப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம் வெப்பங்குடி கோயிலுக்கு தானம் தரப்பட்டது.

திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறைக் கோயிலுக்கு நிலம் தானமாகத் தரப்பட்டது.

திருமங்கல மாவட்ட புதூர்ப் சொக்கநாதர் கோயிலுக்குத் திருமால் சமுத்திரம் என்ற ஊர் தானமாகத் தரப்பட்டது.

அம்பை வட்டம் வைராவிக்குளத்தில் இருந்த பூசாரிக்கு நிலம் தானமாகத் தரப்பட்டது.

ஸ்ரீரங்கம் கோயிலுக்குத் திருவிழாவிற்கும் பூசைக்கும் தானங்கள் அளிக்கப்பட்டன.

பொதுப் பணிகள்

திருமலை நாயக்கர் தனது ஆட்சியில் சமயப்பணிகள் மட்டுமல்லாமல் சமுதாயப் பணிகளையும் செய்திருக்கின்றார். கண்மாய்கள் கோடைக்காலத்தில் வற்றியபோது அவற்றிலிருந்த மீன்களைக் குத்தகைக்குவிட்டு அப்பணத்திலிருந்து பலபுதிய கண்மாய்களை வெட்டுவித்தார். மேலும் பல இடங்களுக்குச் செல்லும் சாலைகளையும் அவ்வழிகளில் செல்லும் பயணிகள் தங்குவதற்குச் சத்திரங்களையும் அமைத்துள்ளார். சத்திரங் களில், பசித்து வந்த மக்களுக்கு அன்னதானமும் தண்ணீரும் தர ஏற்பாடு செய்துள்ளார். மதுரைக்கோயிலில் அமைத்திருந்த தனது கட்டளையிலிருந்து திருப்பாலை அன்னதானச்சத்திரம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கயற் கண்ணி ஆலயத்திற்கு முன்புறமுள்ள மடத்தில் அன்னதானம் அளிக்கத் திருமலை நாயக்கரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்று திருப்பணி மாலை தெரிவிக்கின்றது.

''முனைவேல் விரிஅங் கயற்கண்ணி சந்நிதி
        முன்மடத்துள்
அனைவோர்க்கும் அன்னமும் தோழியம் மாடன்
        அறைக்கும் அனு
தினம்மே தினியில் நடக்கும் படிக்கு ஈந்து
        இசையுங் கொண்டான்
புனல்வேலி தந்தனன் கச்சித் திருமலை
        பூபதியே''

—திருப்பணிமாலை

திருமலை நாயக்கர் காலத்து இலக்கியம்

திருமலை நாயக்கர் காலத்தில் பல பெருந்தமிழ்ப் புலவர்களும், தெலுங்குப் புலவர்களும், வடமொழிப் புலவர்களும் வாழ்ந்திருக்கின்றனர். இவர்களில் சிலருக்குத் திருமலை மன்னனின் ஆதரவு கிடைத்திருக்கின்றது. இவர்கள் பல அரிய இலக்கியங்களை இயற்றித் தமிழ், தெலுங்கு, வடமொழி இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்த்திருக்கின்றனர். திருமலை நாயக்கரால் குமரகுருபரர், க்ஷேத்ரையா, நீலகண்ட தீட்சிதர் போன்ற தமிழ், தெலுங்கு, வடமொழிப் பெரும்புலவர்கள் ஆதரவளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைத் தவிர பெயர் தெரியாத நாட்டுப்புறப் பாடலாசிரியர்களும் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்திருக்கின்றனர். பல சுவையான வரலாற்றுக் கதைப்பாடல்களை இவர்கள் இயற்றித் தந்திருக்கின்றனர்.

தெலுங்கு, வடமொழி வல்லுநர்களைத் திருமலை மன்னர் ஆதரித்தார் என்பதற்கு கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவை சான்று அளிக்கின்றன. தமிழிலக்கிய உலகில் புகழ்பெற்று விளங்கும் குமரகுருபரரின் மீனாட்சிப்பிள்ளைத்தமிழ் திருமலை நாயக்கர் முன்னர் அரங்கேற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது. குமரகுருபரரும் திருமலை நாயக்கரைப் புகழ்ந்து ''மீனாட்சியம்மைகுறம்'' என்ற சிற்றிலக்கியத்தில் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

'' நீர் வாழி தென்மதுரை நின்மலனார் அருள் வாழி
காா்வாழி அங்கயற்கண் கன்னிதரு வருள் வாழி
சீர்வாழி உடன் நகர்த் திருமலை பதிவாழி
பேர் வாழி அவன் செல்வம் பெரிதும் வாழியவே''.

திருமலை நாயக்கர் காலத்துத் தமிழ் இலக்கியம்

	இயற்றிய நூல்கள்
குமரகுருபரர் :	மீனாட்சி பிள்ளைத் தமிழ்
	கந்தர் கலிவெண்பா
	மீனாட்சியம்மை குறம்
	மதுரைக் கலம்பகம்
	சகலகலாவல்லிமாலை
	சிதம்பரச் செய்யுட்கோவை
	நீதிநெறி விளக்கம்
பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் :	அழகர் அந்தாதி
	திருவரங்கக் கலம்பகம்
	திருவரங்கத்து அந்தாதி
	திருவரங்கத்து மாலை
	திருவரங்கத்து ஊசல்
	திருவேங்கடத்து ஊசல்
	திருவேங்கட மாலை
	நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி
சுப்பிர தீபக்கவிராயர் :	விறலிவிடு தூது
	கூளப்பநாயக்கன் காதல்

வாய்மொழி இலக்கியம்

திருமலை நாயக்கர் காலத்தில் நடைபெற்ற அரசியல், சமுதாயப் போராட்டங்களையும் சித்திரிக்கும் வகையில் அமைந்த பல நாட்டுப்புற இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இப்போராட்டத்தில் முக்கிய பங்குபெற்ற படைத்தலைவர்களின் பெயரில் இவை பெயரிடப்பெற்றன. இராமப்பய்யன் அம்மானை, இரவிக்குட்டிப்போர், மதுரைவீரன் கதை என்பவை இவ்வகையில் புகழ்பெற்ற வரலாற்றுக் கதைப் பாடல்களாகும்.

இராமப்பய்யன் அம்மானை : இப்பாடல் **2500** அடிகளைக் கொண்டதாகும். இவ்வகையில் தோன்றிய வாய்மொழி இலக்கியங்களில் இதுவே முதல் வரலாற்றுக் கதைப் பாடலாகும் என்பர். திருமலை நாயக்கர் மறவர் நாட்டில் எழுந்த குழப்பத்தை ஒழிக்க அவரது படைத்தலைவர் இராமப்பய்யன் சேது நாட்டில் நடத்திய போர்களைப்பற்றியும்; அப்போரில் அஞ்சாது போரிட்ட சடைக்கதேவரின் வீரத்தையும்; அவரைக் கடல்கடந்து சென்று இராமேஸ்வரத்தில் சென்று மடக்கிய இராமப்பய்யனின் திறத்தையும் இப்பாடல் எடுத்துக் கூறுகின்றது.

இரவிக்குட்டிப் போர் : திருமலை நாயக்கர் திருவாங்கூர் மீது படையெடுத்துச் சென்று நடத்திய போரைப்பற்றி இப்பாடல் விளக்குகின்றது. திருமலை நாயக்கரின் சார்பாகப் படையெடுத்துச் சென்ற இராமப்பய்யனை எதிர்த்த திருவிதாங்கூர் மன்னனின் மந்திரி இரவிக்குட்டிப் பிள்ளையின் வீரத்தையும் அப்போரில் வீரமரணம் அடைந்த அவரது பெருமையையும் இப்பாடல் எடுத்துக் கூறுகின்றது. இதில் போரில் இறந்த இரவிக்குட்டிக்காக அவரது தாயும் மனைவியும் கதறும் நிலை அழகுபடப் பாடப்பெற்றுள்ளது.

மதுரைவீரன் கதை : இப்பாடலின் கதைத் தலைவனாக வரும் வீரன், திருமலையின் படைத் தலைவனாகப் புகழ்ந்து கூறப்படுகின்றான். இப்பாடல் மதுரை நாட்டில் இருந்த கள்ளரோடு இவன் போரிட்டதை எடுத்துக் கூறுகின்றது. இறுதியில் இவ்வீரன் மீனாட்சியின் கருணைக்காகத் தன் தலையைத் தானே அரிந்து கொண்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்டதையும் தெரிவிக்கின்றது.

வடமொழி இலக்கியம்

நீலகண்டதீட்சிதர் :

சிவோத்கசமஞ்சரி	அன்யாபதேசதகம்

சந்திர ஹஸ்யம்	சிவலீலார்ணவம்
இராமாயணசார சங்காரஜா	கங்காவதரணம்
ஆனந்தசாகரஸ்தவம்	முகுந்தவிலாச காவியம்
குருதத்துவமாலிகா	நளசரிதம்
காளிவிதம்பனம்	நீலகண்டவிசயசம்பு
வைராக்கியசதகம்	சிவதத்துவ ரகசியம்
சபாரஞ்சனசதகம்	சௌபாக்கியசந்திராதபம்
சாந்திவிலாசம்	மகாபாசியபிரதீபபிரகாசம்

சொக்கநாதமகி :

பாசியரத்தினாவளி	சப்தகௌமுடி
தாதுரத்னவளி	

வேங்கடேசர் :

யமகாநவம்	இராமசந்ரோதய காவியம்

நீலகண்ட தீட்சிதர்

நாயக்க மன்னர்கள் தங்களை நல்வழிப்படுத்துவதற்காக அறிவுப்புலமை பெற்ற அறிஞர்களைத் தங்கள் குருவாகக் கொண்டார்கள். அவர்களை அருகில்வைத்து ஆட்சி நடத்தினார்கள். இந்தவகையில் திருமலை நாயக்கரால் பெரிதும் ஆதரிக்கப்பட்டவர்களில் தலையானவர் வடமொழி அறிஞர் நீலகண்டதிட்சிதர் ஆவார். இவர் நாயக்கர் காலத்தில் சிறந்த அரசியல் அறிஞராகவும், இலக்கியப் புலவராகவும், இலக்கிய விமர்சகராகவும், சமய ஞானியாகவும் விளங்கினார். தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள அடையப்புலத்தில் கி.பி 1610-இல் பிறந்தார். தஞ்சையில் தனது கல்விப் புலமையைப் பெருக்கி கி.பி. 1624-க்குப் பிறகு திருமலை நாயக்கரது அவைக்களத்தை அணி செய்தார். அரசர்க்கு வேண்டியபோது அறிவுரைகள் வழங்குதல், அரசர் சார்பாகக் கோயில் காரியங்களைக் கவனித்தல், அரசர் துயில்கொள்ளும்முன்னர்

அறநெறிக் கதைகளை எடுத்துச் சொல்லுதல் இவரது செயல்களாக இருந்தன. கி.பி. 1655 வரை மதுரையில் இருந்தார். அதன்பிறகு திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையிலுள்ள பாலமடை என்ற ஊருக்குச் சென்று தனது இறுதிக் காலத்தைக் கழித்தார்.

நீலகண்ட தீட்சிதர் திருமலை நாயக்கர் காலத்தில் புகழ் பெற்று விளங்கிய சமயவாதிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். நாயக்கர் புதுமண்டபம் கட்டி அதில் ஏகபாதமூர்த்தி சிற்பத்தை வைக்கும்போது நடந்த சைவ வைணவ விவாதத்தின்போது சைவ சமயத்தவரின் சார்பாகப் பங்குகொண்டார் என்று டெயிலரின் வரலாற்று ஓலைச்சுவடித் தொகுப்பு கூறுகின்றது. மதுரைச் சொக்கரின்மீதும், அங்கயற்கண்ணியின்மீதும் அளவில்லாப் பற்றுக்கொண்டு விளங்கியமையால் தீட்சிதர் அவர்களின்மீது வடமொழி இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

நீலகண்டதீட்சிதர் வடமொழியில் பல அரிய பக்திப்பாடல்களையும், சிற்றிலக்கியங்களையும், காவியங்களையும், தத்துவ நூற்களையும், தந்திர நூற்களையும், இலக்கண நூற்களையும், உரைகளையும் செய்துள்ளார். இவ்வகையில் இவர்செய்த நூற்கள் மொத்தம் பதினெட்டாகும். இவை வடமொழி இலக்கிய வரலாற்றில் உயர்ந்த இடத்தைப்பெற்று விளங்குகின்றன. நாயக்கர்கால அரசியல், சமயம், சமுதாயம் ஆகியவற்றை நாம் அறிய இவை பெரிதும் துணைபுரிகின்றன.

திருமலை நாயக்கர் காலத்துத் தெலுங்குப் புலவர்கள்

திருமலை நாயக்கர் காலத்தில் தெலுங்கு இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற இரண்டு தெலுங்குப் புலவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் இருவரும் திருமலை நாயக்கரால் பாராட்டிச் சிறப்பளிக்கப்பட்டிருக்கின்றனர்.

அவர்களில் ஒருவர் இலிங்கமமகீ ஸ்ரீகாமேஸ்வரகவி என்பவர் ஆவார். மற்றொருவர் க்ஷேத்ரையா என்பவர் ஆவார்.

காமேஸ்வரகவி

இவர் திருமலை நாயக்கரால் மட்டுமின்றி அவர் காலத்தில் திருச்சியில் ஆளுநராக இருந்த முத்தழகிரியால் பெரிதும் ஆதரிக்கப்பட்டவர். திருமலைக்குப் பின்னர் வாழ்ந்த சொக்கநாதநாயக்கராலும் போற்றப் பெற்றவர். இவரது சொந்த ஊர் காளஹஸ்தி ஆகும். இவர் இலக்கியத்தில் மட்டுமின்றி வீணை வாசிப்பதிலும் வல்லவராக விளங்கியவர். இவர் தன்னை 'ஸ்ரீகாமேஸ்வரகவி' என்று அழைக்காது 'திருகாமேஸ்வரகவி' என்று அழைத்துக்கொண்டது, இவரது தமிழ்ப் பற்றைக் காட்டுகின்றது. இவர் இயற்றிய இலக்கியங்கள் பின்வரும் மூன்று நூற்களாகும்.

சத்தியபாமா சாந்துவனமு
தேனுமகாத்மியம்
ருக்மிணி பரிணயனமு

க்ஷேத்ரையா

க்ஷேத்ரையா என்ற தெலுங்குப் புலவர் திருமலை நாயக்கராலேயே அழைக்கப்பட்டு அவரது அவைக்களத்திற்கு வந்தவர். அவர் தான்பாடிய இரண்டாயிரம் பதத்தில் திருமலை நாயக்கரை நேரில் கண்டதைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார். 'மதுரை திருமலேந்திரன் எனக்கு நன்றாக வெகுமதிகள் கொடுத்தார். என்னை வரவழைத்து அமரும்படி கூறிப் பதங்கள் பாடும்படி கேட்டுக்கொண்டார். உடனே நான் எண்ணிக்கொள்ளுங்கள் என்று கூறி இரண்டாயிரம் பதங்கள் அவர்முன் பாடினேன்'.

இவர் ஆந்திர மாநிலத்திலுள்ள கிருஷ்ணாமாவட்டத்து மூவ்வா என்ற ஊரில் பிறந்தார். தன்னை 'மூவ்வகோபாலன், என்று அழைத்துக்கொண்டார். இவர் கிருஷ்ணனிடத்து ஆழ்ந்த ஈடுபாடுகொண்டு விளங்கியவர். நினைத்த மாத்திரத்தில் உடனே கவிமழை பொழியும் ஆற்றல் நிறைந் தவர். திருமலை நாயக்கரிடம் மட்டுமில்லாது இவர் தஞ்சை, வேலூர் போன்ற நாயக்கர்களிடமும் சென்று வெகுமதி பெற்று உள்ளார். இவர் தெலுங்கில் 2000 பதங்களைப் பாடியுள்ளார்.

தெலுங்கு இலக்கியத்தில் திருமலை நாயக்கர்

தெலுங்குப் புலவர்கள் இயற்றிய காவியங்களிலும், அவர் களது பாடல்களிலும் திருமலை நாயக்கரைப்பற்றிய குறிப்புக் கள் காணப்படுகின்றன. காமேஸ்வரகவி இயற்றிய 'சத்திய பாமா சாந்துவனமு' என்ற நூலில் முதற்காண்டத்தின் இறுதியில் நாயக்கரின் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. காமேஸ்வரகவியைப் பாராட்டிய திருமலை நாயக்கர் அவருக்குப் பல சன்மானங்கள் அளித்துள்ளார். அவற்றை அவரது அவைக்களத்தில் வைத்து வழங்கியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கனவாக காமேஸ்வரகவியாலேயே குறிப்பிடப் படும் பொருள்கள் வெள்ளைக்குடை, சாமரம், வெற்றிலைப் பெட்டி, தங்கப் பல்லக்கு முதலியனவாகும். மதுரை நாயக்கரின் சிறப்பு 'சத்தியபாமா சாந்துவனமு' - வில் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

தெலுங்குப் புலவர்கள் பாடிய பாடல்கள் பலவற்றில் திருமலையின் சிறப்பு எடுத்துக்கூறப்படுவதோடு அவர் தான் கட்டிய புதுமண்டபத்தில் எவ்வாறு வசந்தவிழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினார் என்ற அருமையான வருணனை யும் நாயக்கர் காலப் பண்பாட்டையும், சமுதாயத்தையும் பல செய்திகளையும் காணமுடிகின்றது.

வெளிநாட்டு உறவு

திருமலை மன்னரும், வெளிநாட்டவரும்

திருமலை மன்னர் தனது காலத்தில் தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரைக்கு வந்திருந்த டச்சுக்காரர்களிடமும், போர்ச்சுக் கீசியரிடமும் எந்தவகையான உறவினை வைத்திருந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. கி.பி. 1635-இல் தூத்துக்குடி போர்ச்சுக்கீசியரின் தாக்குதலுக்குள்ளாயிற்று. இதே போர்ச்சுக்கீசியர் திருமலை நாயக்கருக்குச் சேதுபதிகளுடன் நடைபெற்ற போரில் வெற்றிபெற உதவி செய்தனர். இதனால் திருமலை மன்னர் அவர்களுக்குப் பல சலுகைகளை அளித்தார். டச்சுக்காரர்களுக்கு எதிராக அவர்களை கி.பி. 1648 இல் பட்டணத்தைவிட்டு வெளியேறும்படி செய்தார். இதனால் கோபம்கொண்ட அவர்கள் திருச்செந்தூரைக் கைப்பற்றினார்கள். திருச்செந்தூர் முருகன் கோயிலைக் கோட்டையாக மாற்றி அப்பகுதிகளிலிருந்த பரதவர்களிடம் வரிவசூல் செய்தனர். சிறிது காலத்தில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு நகரைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டு வெளியேறி னார்கள்.

இதேபோன்று டச்சுக்காரர்கள் கி. பி. 1658-இல் தூத்துக் குடியைக் கைப்பற்றிப் பல கொடுஞ்செயல்களைப் புரிந்தனர். நகரைத் தீயிட்டுக் கொளுத்துவதும் மக்களைத் துன்புறுத்தி வரி வசூல் செய்வதும் நடைபெற்றன. மதுரையிலிருந்து வெகு தூரத்தில் இருந்த இப்பகுதிகளில் நடைபெற்ற இச்சம்பவங் களைத் திருமலை நாயக்கரால் உடனே தடுத்து நிறுத்த இயல வில்லை. மேலும் திருமலை நாயக்கர் இக்காலங்களில் விஜய

நகரப் பேரரசுடனும், மைசூர் மன்னருடனும் போர் செய்ய வேண்டிய பல நெருக்கடிக்குள்ளாகி இருந்தமையால் வெளி நாட்டவரின் செயல்களைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. மதுரை நாயக்க மன்னரிடம் வலிமைவாய்ந்த கடற்படை இல்லாத காரணத்தினால் வெளிநாட்டிலிருந்து வந்த டச்சுக் காரர்களும், போர்ச்சுக்கீசியரும் கிழக்குக் கடற்கரைப் பகுதி களில் தன்னிச்சையாக உலவித் திரிந்தனர்.

திருமலைமன்னரும் கிறித்துவமும்

திருமலை மன்னர் காலத்தில் மதுரைப் பகுதிக்குப் பல கிறித்துவப் பாதிரியார்கள் வந்துள்ளனர். திருமலை மன்னர் ஆதரவுடன் ஆங்காங்கே இருந்த குறுநிலத் தலைவர்கள், அதி காரிகள், வைதீக மதத்தவர், குடிமக்கள் ஆகியோரின் எதிர்ப்புக் களைச் சமாளித்து மதுரைப் பகுதியிலும், திருச்சிப் பகுதியிலும் கொங்குநாட்டுப் பகுதியிலும் தங்கள் சமயத்தை வளர்த்தனர். இவர்கள் ஆங்காங்கே தங்கிக்கொண்டு சமயத்தை வளர்த்த போது ஒருவருக்கொருவர் எழுதிக்கொண்ட கடிதங்கள் நாயக்கர்கால நாட்டுநிலையை ஓரளவு நன்கறிய நமக்குத் துணைபுரியும் ஆதாரங்களாக விளங்குகின்றன. இவர்களில் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர்களில் பின்வரும் கிறித்துவ பாதிரியார்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

ஆண்டோனியோ வீக்கோ — (Antonio Vico)
இராபர்ட்-டி-நொபிலி — (Robert-de-Nobili)
பால்தாசர் டாகாஸ்டா — (Balthazar Da Costa)
பாதர் ஆல்வர்ட்ஸ் — (Father Alvarez)
புரோயன்சா — (Proenza)
அந்தோணி ரொபினா

இக்கிறித்துவ சமயத்தவரிடம் திருமலை நாயக்கரின் அணுகுமுறை அனுதாபம் கொள்ளும் முறையிலும், மனசாட்

சிக்கு மதிப்பளிக்கும் வகையிலும் அமைந்திருந்தது. மேலும் இக்கிறித்துவப் பாதிரிமார்கள் தங்கள் சமயத்தை வளர்ப்பதற்கு நாயக்கரின் சமயப்பொறையும் பெருந்தன்மையுமே பெருந் துணைபுரியும் காரணங்களாக அமைந்திருந்தன. திருமலை நாயக்கர் இராபர்ட்-டி-நொபிலியும் டாகாஸ்டாவும் தன்னை நேரில்காண அனுமதியளித்தார். அவர்களை நல்லமுறையில் வரவேற்று விருந்தோம்பி விடைபெறும்போது பல விலை மதிப்பற்ற பொருட்களைப் பரிசாக அளித்தார். கிறித்துவம் வளர்வதற்கு வேண்டிய ஆணைகளைப் பிறப்பித்தார். மேலும் அவர்கள் விரும்பிய இடங்களில் விரும்பியமுறையில் சர்ச்சுகள் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கினார்.

இராபர்ட்-டி-நொபிலி

இவர் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்த பாதிரிமார் களில் மிகுந்த சிறப்பிற்கும் பெருமைக்கும் உரியவராவார். ரோமாபுரியில் பிறந்து ஏசுகழகத் தொண்டராக கிறித்துவத் தொண்டு புரிய கி.பி. 1605-இல் இந்தியாவிற்கு வந்தார். தமிழ் நாட்டில் ஏனைய ஏசுகழகத் தொண்டர்போலல்லாமல் தலையை மழித்து காவியுடைத்தரித்துக்கொண்டார். நெற்றியில் பொட்டிட் டுக்கொண்டு தமிழ்நாட்டுத் துறவிபோல் வாழ்ந்தார். தத்துவ போதகர் என்று தன்பெயரை மாற்றிக்கொண்டார். தமிழ், வடமொழி, தெலுங்கு ஆகிய மும்மொழிகளில் தேர்ச்சிபெற்று விளங்கினார்.

கி.பி. 1623-இல் மதுரையிலிருந்த எதிர்ப்பின் காரணமாக மதுரையைவிட்டு வெளியேறினார். திருச்சியிலும் பெருத்த எதிர்ப்பு எழவே சேந்தமங்கலம் சென்றடைந்தார். அங்கு மதுரை நாயக்கர்களுக்குக் கட்டுப்பட்டுத் திறைசெலுத்தி வந்த இராமச்சந்திர நாயக்கரின் ஆதரவு கிடைத்தது. சிறிதுகாலத் திற்குப் பிறகு சேலம் சென்றடைந்தார். அங்கு ஆட்சிபுரிந்து

வந்த சலபதி நாயக்கரின் ஆதரவும் தொடர்ந்து அவரது தமைய யனாரின் ஆதரவும் கிடைத்தன. கிறித்துவத்தைப் பரப்புவற்கு வேண்டிய உதவிகள் நொபிலிக்குத் தொடர்ந்து கிடைத்தன.

இவர் காலத்தில் மற்றொரு பகுதியிலிருந்து கிறித்துவப் பணி புரிந்துவந்த 'வைக்கோ பாதிரியாரின் உடல்நலம் கருதி நொபிலி மீண்டும் தெற்கே வரநேர்ந்தது. கி.பி. 1627-ல் இருந்து திருச்சிப் பகுதியில் கிறித்துவத்தைப் பரப்பினார். பல கடுமையான எதிர்ப்புக்களிடையே கிறித்துவத்தை வளர்க்கப் பாடுபட்டார். கி.பி. 1638-இல் மீண்டும் மதுரை வந்தடைந்தார். கி.பி. 1639-க்குப் பின்பு திருமலை நாயக்கரைச் சந்தித்தார். பார்க்கவந்த நொபிலி கொண்டுவந்த பலபொருட்களை நாயக்கர் அன்புடன் பெற்றுக்கொண்டு பரிவுடன் அவர் குறைகளைக்கேட்டார். அவரை விருந்தோம்பி, விடைபெறும் போது பல அரிய பொருள்களை அன்புடன் அளித்தார். அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கிறித்துவம் வளர் வதற்குத் துணைபுரியும் வகையில் பல வாக்குறுதிகளைத் தந்தனுப்பினார்.

திருமலை நாயக்கரைச் சந்தித்தபின்பு நொபிலி தனது இறுதிக் காலமான கி.பி. 1660 வரை பல களப்பணிகளில் முனைந்து ஈடுபட்டுச் செயலாற்றினார். இக்காலங்களில் கிறித்துவம் தமிழ் மக்களிடையே வளர்வதற்குத் தமிழில் பல அரிய சமயநூற்களை எழுதி வெளியிட்டார். கிறித்துவ சமய இலக்கிய வரலாற்றிலும், தமிழ் உரைநடை இலக்கிய வரலாற்றி லும் இவை சிறப்பான இடத்தைப்பெற்று விளங்குகின்றன.

நொபிலி எழுதிய நூற்கள்:

ஞானோபதேசம் — மந்திரமாலை

ஆத்தும நிர்ணயம் — தூஷண திக்காரம்

சத்தியவேத லக்ஷணம்	சகுண நிவாரணம்
பரமசூட்சுமாபிப்ராயம்	கடவுள் நிர்ணயம்
புனர்ஜன்ம ஆட்சேபம்	நித்தியஜீவன் சல்லாபம்
தத்துவக்கண்ணாடி	சேசுநாதர் சரித்திரம்
தவசுசதம்	ஞான தீபிகை
நீதிக்குக் காவல்	அநித்யநித்ய வித்தியாசம்
பிரபஞ்ச விநோதவித்தியாசம்	தமிழ் போர்ச்சுகீசு அகராதி

நாயக்கரைப் புகழ்ந்து அந்தோணி ரொபினா கடிதம்

கி.பி. 1627-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அந்தோணி ரொபினா என்ற பாதிரியார் மற்றொரு பாதிரியாருக்கு எழுதிய கடிதத்தில் நாயக்கரைப் புகழ்ந்து கூறியுள்ளார். நாயக்கர் தன்னை வரவழைத்துப் பெருமைப்படுத்தியுள்ளதையும் தனது வேண்டுகோளுக்கிணங்க மக்கள் செலுத்திவந்த வரியைக் குறைத்ததையும் கிறித்துவ சமயத்திற்கு அவர் அளித்த ஆதரவைப் பற்றியும் அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

'இந்த ஆண்டு கடற்கரையோரம் எல்லாம் யாதொரு சண்டை சச்சரவின்றிக் கடவுள் அருளால் அமைதியாய் இருக்கின்றது என்று மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றேன். இறைவன் அருளால் பதிதர்களுக்குள்ளும் பரதவர்களுக்குள்ளும் யாதொரு சச்சரவும் இல்லை. இவ்வியாதிக்குக் காரணம் தூத்துக்குடி, மதுரைநாயக்கர் ஆளுகைக்கு வந்ததேயாகும். நாயக்கர் அரசாங்க உத்தரவை அனுப்பி என்னை அங்கு வரவழைத்தார். அவ்வுத்தரவு முப்பது முழம் நீளமுள்ள மெல்லிய வெள்ளைச் சல்லாசில் தோய்த்த அவரது கைமுத்திரையுடன் இருந்தது. இது அவர் செய்யக்கூடிய பெரிய மரியாதை' அதை 'ஆபீஸ்டகம்' என்பார்கள். அதைக் கொண்டுபோகிறவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம். அதற்குத் தட்டுத் தடை இல்லை. அவ்வமயம் நாயக்கர் திரிசிரபுரத்தில் இருந்தார்.

அவ்வுத்தரவைப் பெற்றுக்கொண்டு நான் அங்கு சென்றேன். அவர் என்னை மிகுந்த மரியாடையுடன் வரவேற்றார். நான் அவரிடம் உழைப்பவர்கள் படுகின்ற தொல்லையையும் அவர்களுக்கு இருக்கும் நெருக்கடியான நிலையையும் தெரிவித்த போது அவர் மிகக் கவனமாயும் அன்பாயும் கேட்டார். 'உங்களுக்கு ஏதாவது நான் செய்யவேண்டுவது இருக்குமா?' என்றார். எனக்கு ஒன்றும் வேண்டுவதில்லை. ஆண்டுதோறும் 800 பதக்கம் கொடுக்க முடியாமல் இருக்கும் ஏழைப் பரவர்கள் மீது கருணை காட்டவேண்டும்' என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் அந்த வரியை மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்திருப்பதாகவும், அதற்குப் பின்பு அவர்கள் ஆண்டுதோறும் 500 பதக்கம் கொடுத்து வருமாயும் முன்னே வழக்கமாய்க் கொடுத்துவந்த இருநூறு மாடுகளுக்குப் பதிலாக ஐம்பது மாடுகள் கொடுத்து வருமாறும் கட்டளையிட்டு அந்தப்படி ஓர் ஓலையில் அதிகார உரிமைப்பத்திரமும் எழுதிக்கொடுத்தார். விக்கிரக ஆராதனை செய்யும் இவ்வரசர் செய்ததைப்போல் வேறே எந்தக் கிறிஸ்தவ அரசனாவது வரியைத் தள்ளிக் கொடுப்பது செய்வானா என்பதைத் தாங்களே சிந்தித்துப் பார்க்கலாம். கடவுள் அவருக்கு ஞானஸ்நானம் பெறும்படி அருள்வாராக.

நாயக்கர், ஏசுசபை சாமியார் ஒருவர் எப்போதும் மதுரையில் இருந்து வரவேண்டும் என்றும், அவருடைய வாழ்க்கைச் செலவிற்காக 10 பதக்கமும் ஒரு கண்டி அரிசியும் கொடுப்பேன் என்றும் சொன்னார். அதன்படி இப்போது அங்கே வீக்கோ சாமியாரை வைத்துக்கொண்டு அவருக்கு அவ்வாறு உதவிக் கொண்டிருக்கிறார்''.......

திருமலையின் தீர்ப்பு

மதுரை மாவட்டத்து டி. கல்லுப்பட்டிக்கு அருகிலுள்ளது

நல்லமறம் என்ற ஊர். அவ்வூரில் திருமலை நாயக்கர் காலத்தில் வழக்கு ஒன்று நடந்துள்ளது. சிந்துரெட்டி என்ற ரெட்டியார் சமூகத்தினைச் சேர்ந்த ஒருவர் சுப்புலாபுரத்தில் போய்த் தனக்குச் சொந்தமான ஊரை விற்கப்போனார். அப்போது அதனை வாங்குவதற்குச் சோலப்ப ரெட்டி என்பவர் முன்வந்தார். இவரும் ரெட்டியார் சமூகத்தினைச் சார்ந்தவர். ஆனால் ரெட்டியார் குலப்பிரிவில் தாழ்ந்த பிரிவைச் சார்ந்தவர். இதனால் ஊரை வாங்கவந்த சோலப்ப ரெட்டியைப் பார்த்து சிந்து ரெட்டியார் நீ குறவ ரெட்டி, எனவே உனக்கு ஊரை விற்கமாட்டேன் என்று சொல்லி அவரை பலவிதத்தில் திட்டவும் செய்தார். அவ்வேளையில் அப்பகுதியைப் பார்க்கவந்த திருமலை நாயக்கர் நல்லமறம் வந்து தங்கியிருந்தார். இதனையறிந்த சோலப்ப ரெட்டி திருமலை நாயக்கரிடம் சென்று தனது குறையை முறையிட்டுக் கூறினார். இதனைக் கேட்ட திருமலை நாயக்கர் சோலப்ப ரெட்டிக்கு "நாயக்கன்" என்ற பட்டமும் கொடுத்து சிந்து ரெட்டிக்கே ஊரை விற்க ஏற்பாடு செய்யும்படி தீர்ப்பு வழங்கினார்.

புலிவேட்டைக்குப் போனது

நாகமலைப் பகுதியிலுள்ள மேலக்கால் என்ற ஊர்ப்பகுதியில் திருமலை நாயக்கர் ஒருமுறை வேட்டைக்குப் போயிருந்தார். அப்போது வாகைக்குளம் ரெங்கசாமி நாயக்கன் என்பவனும் உடன் சென்றிருந்தான். வேட்டை தொடங்கிற்று. மும்முரமாக அனைவரும் புதரிலுள்ள மிருகங்களைக் கலைத்து வெளியேறும்படி செய்தனர். அப்போது திடீரென்று பெரும்புலி ஒன்று திருமலை நாயக்கர் முன்தோன்றி அவர்மேல் பாயவிருந்தது. யானைமேல் அம்பாரி கொண்டிருந்த நாயக்கரோ தனக்கு வந்த அப்பேராபத்தை அறியாதிருந்தார். ஆனால் உடன் வந்திருந்த ரெங்கசாமி நாயக்கன் நாயக்கருக்கு ஏற்படவிருந்த பேராபத்தை

அறிந்தான். உடனே கணமும் தாமதியாது நாயக்கரைக் கொல்ல வந்த புலியைக் கல்வெடியால் இரண்டு குண்டுகள்போட்டுச் சுட்டான். புலி சுருண்டு விழுந்தது. இதனைக் கண்ணுற்ற நாயக்கர் தன் உயிருக்கு ஏற்படவிருந்த பேராபத்தைப் போக்கிய ரெங்கசாமி நாயக்கனைத் தன்னருகில் அழைத்து உடனே தனது கழுத்தில் அணிந்திருந்த கொத்துச் சரப்பளியை கழற்றி அவன் கழுத்தில் போட்டார். மேலும் அவனை அரண்மனைக்குக் கூட்டிவந்து விருந்தளித்தார். அங்கு அவன் விருப்பத்தின்படியே வாகைக்குளத்தினைச் சேர்ந்த ஐந்து கிராமங்களுக்கும் நாட்டாண்மையாய் இருக்கும் பொறுப்பை அளித்து அனுப்பிவைத்தார்.

அழகர்கோயிலில் திருட்டு

திருமாலிருஞ்சோலை அழகர்கோயில் கருவூலத்தில் இருந்த தங்கப் பாத்திரங்களும், வெள்ளிப் பாத்திரங்களும் திருமலை நாயக்கர் காலத்தில் திடீரென்று களவு போய்விட்டன. அக் களவினைப் புரிந்த வேடர்கள் என்னும் வலையர் சாதியினர் கொள்ளையடித்த கோயிற் பொருட்களுடன் ஓடிமறைந்தனர். மதுரையில் இருந்த திருமலை நாயக்கருக்கு இச்செய்தி எட்டியது. உடனே அழகர்கோயில் கோட்டை வடக்கு வாசலுக்குப் பொறுப்பாய் இருந்த வெள்ளியங்குன்றம் இம்முடி கனகராமயக் கவுண்டனை அழைத்து களவுபுரிந்து ஓடிப்போன வேடர்களைக் கண்டறிந்து திருட்டுப்போன பொருட்களை மீட்டுக் கோயிலில் சேர்க்கக் கட்டளையிட்டார். இம்முடி கனகராமயக் கவுண்டன் நாயக்கர் சொன்னபடி திறமையுடன் திருடர்களைக்கண்டு பிடித்து அவர்களிடமிருந்த களவுபோன எல்லாப்பொருட்களையும் மீட்டார். அவை அனைத்தையும் கோயில் கருவூலத்தில் கொண்டுசேர்த்தார். பிறகு திருடர்களின் தலைகளை வெட்டிக் கொன்றபின்னர் திருமலை நாயக்கர் முன்னர் வந்து

நடந்ததைத் தெரிவித்தார். இதனால் மனமகிழ்ந்த நாயக்கர் வெள்ளியங்குன்றம் பாளையக்காரராக விளங்கிய இம்முடிகனக ராமயக் கவுண்டனுக்கு பல வரிச் சலுகைகள் அளித்தார். அழகர் கோயிலில் தலைமுறைதோறும் சித்திரை, ஆடி மாதங்களில் நடைபெறும் திருவிழாக்களில் பல சிறப்புக்கள் பெறும்படி ஆணை வழங்கினார்.

புலிவேட்டையாடியவற்கு வெற்றிலை பாக்கு

ஒருமுறை திருமலை நாயக்கர் ஆண்டாளைச் சேவிக்க ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகிலுள்ள திருவண்ணாமலைக்குச் சென்று தங்கியிருந்தார். அப்போது அவர் தங்கியிருந்த வீதியில் பெண்ணொருத்தி தன் குழந்தைகுட்டிகளுடன் ஓலமிட்டு அழுதுசெல்லும் குரல் கேட்டது. அருகிலிருந்த பாளையக்காரரை அழைத்து, என்னவென்று விசாரித்தார். பாளையக்காரர் வெளியே சென்றுவந்து அப்பெண்ணின் அழு குரலுக்குக்கான காரணத்தினை அறிந்துவந்து, அப்பெண்ணின் கணவனை ஊரில் புகுந்த புலி ஒன்று அடித்துக்கொன்று விட்ட தால் அவள் கதிவேறு இல்லாது கலங்கி அழுது புலம்பிச் செல்கின்றாள் எனத் தெரிவித்தார். இதனால் வருத்தம் கொண்ட நாயக்கர் நாட்டில் உலவும் அப்புலியை, உடனே சென்று, கொன்று வருகின்றவர்களுக்கு என் கையால் தாம்பூலம் தருகின்றேன் எனத் தெரிவித்தார். உடனே நாயக்கர் அளித்த அச்சவாலை ஏற்றுக்கொண்டு மூவரைய தேவரும் அவரைச் சேர்ந்து ஆறுபேரும் நாயக்கர் இடத்தில் தாம்பூலம் பெற்று வெளியே சென்று தீரத்துடன் போராடி அப்புலியைக்கொன்று திரும்பினர். நாயக்கர் இதனால் மிகுந்த சந்தோசம் கொண்டு மூவரைய தேவருக்குத் திருமலை மூவரைய தேவன் என்று பெயர் கொடுத்து உச்சிமோந்து பாராட்டினார்.

மூன்று நாளில் பல்லக்கில் திருச்சி சென்று திரும்பியது

ஒருசமயம் திருமலை நாயக்கர் மதுரையிலிருந்து திருச்சிக்குச் சென்று மூன்றேநாளில் மதுரை திரும்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால், அப்போது தமக்கு அருகில் இருந்தவரை அழைத்து நம் பல்லக்குத் தூக்கிகள் என்னைத் திருச்சிராப்பள்ளி கொண்டுசென்று மூன்று நாட்களுக்குள் மதுரை திரும்ப முடியுமா எனக்கேட்டார். அதற்கு அருகில் இருந்தவர்கள் நம்பல்லக்குத் தூக்கிகள் இதனைச் செய்ய இயலாத நிலையில் உள்ளனர். ஆனால் அம்மைய நாயக்கனூர் பாளையக்காரரும் அவரது பல்லக்குத் தூக்கிகளும் தற்போது இங்கு வந்துள்ளனர். அவரது பல்லக்குத் தூக்கிகளால் இதனைச் செய்யமுடியும் என்று கூறினார். திருமலை நாயக்கரும் அதற்கு ஒப்புக்கொண்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறினார்.

அம்மையநாயக்கனூர் பல்லக்குத் தூக்கிகளும் நாயக்கர் கேட்டுக் கொண்டபடி மூன்றே நாளில் அவரை திருச்சி கொண்டு சென்று மதுரை திரும்பினர். அம்மையநாயக்கனூர் பல்லக்குத் தூக்கி களின் இவ்வரிய செயலைக் கண்டு பாராட்டிய திருமலை நாயக்கர் உடனே அவர்களுக்கு ஏழு கிராமங்களைச் சன்மான மாக வழங்கினார். அதற்கு அப்பல்லக்குத் தூக்கிகள் அவை எங்களுக்கு நிலைத்திருக்காது என்று கூறி தங்காத்துத் தண்ணீர் பாயும் அக்கிராமங்களில் உள்ள குளங்கள் கிணறுகள் இவற்றில் மீன் பிடிக்கும் உரிமையைத் தந்தால் போதும் என்று மன்ன ரிடத்துக் கேட்டுக் கொண்டனர். நாயக்கரும் அவர்களின் விருப்பப்படி அவ்வுரிமையை அம்மையநாயக்கனூர் பல்லக்குத் தூக்கிகளுக்கு வழங்குமாறு செய்து பட்டயமும் கொடுத்தார்.

புலிவேசக்காரனுக்குப் பரிசு

ஒருநாள் திருமலைநாயக்கர் அரண்மனையில் தன் தேவி

யருடன் அமர்ந்திருந்தார். அப்போது அவர் முன்னர் புலிவேட மிட்டு ஆடும் புலிவேசக்காரன் ஒருவன் வந்து புலி வேடமிட்டு ஆடினான். நாயக்கரே கண்டு வியக்கும் வண்ணம் அங்கு மிங்கும் பாய்ந்தாடினான். அவனது ஆட்டத்தில் ஆழ்ந்திருந்த நாயக்கர் காணும்படி திடீரென அரண்மனையின் பெரிய கோட்டைச்சுவரினையும் தாண்டிக் குதித்தாடினான். அவனது அப்புலிப்பாய்ச்சலைக் கண்டு மெச்சிய நாயக்கர் அவனை குதிரை யில் ஏற்றி அவன் விரும்பிய ஊர்களைச் சுற்றி வரச் செய்தார். புலிவேசக்காரன் அமர்ந்து சென்ற குதிரை பொதுப்பு, வைரவ நத்தம், தனிச்சியம், தேனூர், சிறுவாலை, பரவை முதலிய ஊர்களைச் சுற்றி நாயக்கர் அரண்மனை திரும்பியது. புலி வேசக்காரன் சுற்றி வந்த அவ்வூர்களில் ஒவ்வொன்றிலும் அவனுக்குக் குடியிருக்க ஒருவீடும் ஒருகாணி நிலமும் அவனது பாய்ச்சல் திறமைக்குப் பரிசாசக் பாராட்டி வழங்கினார். மேலும் அவனுக்கு 'வாடிப்புலி' என்ற பட்டத்தையும் வழங்கினார். அவனுக்கு அளித்த மானியத்தை உறுதி செய்ய 'வாடிப்புலிமானியம்' என்ற பேரில் செப்பேடும் செய்தளித்தார் என்று கூறப்படுகின்றது. இவ்வாட்டத்தை ஆடியவன் மதுரை மாவட்டத்துப் பரவையைச் சார்ந்தவன் என்றும் இங்கு வசிக்கும் அவனது பின்னோர்கள் இன்றும் வாடிப்புலிமானியம் என்ற பெயரில் இம்மானியத்தை அனுபவித்து வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இவை தவிர ஆதாரமில்லாத பல நிகழ்ச்சிகள் திருமலை நாயக்கரைப் பற்றிச் செவிவழிச் செய்திகளாகச் சொல்லப் படுகின்றன. திருமலைநாயக்கர் புதுமண்டபம் கட்டிய சுமந்திர மூர்த்தி என்ற சிற்பிக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தது, அச்சிற்பிக்கு சிற்ப இலக்கணம் உணர்த்திய நீலகண்டதீட்சிதர் தன் கண்ணில் எரியும் கற்பூரத்தை வைத்துக் கொண்டது, திருமலைநாயக்கர் அரண்மனையில் உடும்பை எறிந்து ஏறித்

திருடன் ஒருவன் கன்னக்கோல் வைத்துத் திருடியது, பெண் வேடத்தில் திருமலைநாயக்கரை ஒருவன் கொல்ல முயன்றது போன்ற பல செவிவழிச் செய்திகள் மதுரை மக்களிடையே இன்றும் பேசப்படுகின்றன.

திருமலை நாயக்கர் கல்வெட்டு உள்ள ஊர்கள்

திருநெல்வேலி மாவட்டம்	வைராவிக்குளம் ஸ்ரீவைகுண்டம் குதிரைமொழி பழையகாயல் சிவசைலம் ஆலடியூர் தெற்குக்காரிச்சேரி
இராமநாதபுரம் மாவட்டம்	வேம்பங்குடி
மதுரை மாவட்டம்	புதூர், தாசரிப்பட்டி, நிலையூர்
திருச்சி மாவட்டம்	திருப்பராய்த்துறை, ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் குளகானத்தூர்
கோவை மாவட்டம்	திருமுருகன் பூண்டி
சேலம் மாவட்டம்	கபிலமலை, எருமைப்பட்டி, திருச்செங்கோடு

திருமலை நாயக்கர் செப்பேடு கிடைத்த ஊர்கள்

இராமநாதபுரம் மாவட்டம்	இராமேஸ்வரம் இராமநாதபுரம், பள்ளிமடம்
மதுரை மாவட்டம்	மதுரை, மங்கல்ரேவு வீரப்பெருமாள்புரம் பொருப்பு மேட்டுப்பட்டி

	அம்மை நாயக்கனூர்,
	சீவல்சரகு, பழனி,
	வெள்ளியங்குன்றம்,
	இராசக்காபட்டி,
	தேவதானப்பட்டி
திருநெல்வேலி மாவட்டம்	கந்தீஸ்வரம்
திருச்சி மாவட்டம்	திருவானைக்காவல்
கோவை மாவட்டம்	கண்ணாடிப்புத்தூர்
	திருமுருகன் பூண்டி

★

அடிப்படை ஆதாரங்கள்

1. Reports on Epigraphy, Archaeological Survey of India.
2. Bertrand, Father .J. 'La Mission du Madure' 4 vols. 1847-54
3. Burgess, Jas and Natesa Sastri, Pandit S.M. 'Tamil and Sanskrit Inscriptions' (Archaeological Survey of India IV, 1886).
4. Epigraphia Indica.
5. Rangachary - V, 'Inscriptions of the Madras Presidency' 3 vols, 1919.
6. Sewell, Robert, 'List of Antiquities, Madras, 2 vols. 1882 and 1884 (Archaeological Survey of Southern India vols. I and II).
7. Taylor, The Rev. William, 'Oriental Historical Manuscripts 2 vols. 1835.
8. Mrtyunjaya Manuscripts, Pandian Chronicles - by Taylor.
9. Taylor, The Rev. 'William Catalogue Raisonne of Oriental Manuscripts 3 vols. 1857-62.
10. Travancore Archaeological Series.
11. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் - Oriental Manuscripts Library Madras.
12. மதுரைக்கோயில் திருப்பணிமாலையும், தலத்தார் வரலாறும்- செந்தமிழ்-27.
13. இராமப்பய்யன் அம்மானை.
14. மதுரைவீரன் அம்மானை, மதுரைவீரன் கதை.
15. குமரகுருபரர், பிள்ளைப்பெருமாள் அய்யங்கார், சுப்ரதீபக் கவிராயர் இயற்றிய நூல்கள்.
16. திருமலை நாயக்கர்காலத் தெலுங்கு, வடமொழி நூற்கள்.

துணை ஆதாரங்கள்

1. Danvers, F.C. Report on the Portuguese Records relating to the East Indies, 1892, India Office, London.
2. Danvers, F.C. The Portuguese in India 2 vols. 1894.
3. Fergusson James, 'History of Indian and Eastern Architecture 2 vols.
4. Francis, Madurai District Gazetteer.
5. History of Carnataka Governors.

6. Jagedesan S. Dr. Nilakanta Dikshita and his works - A study unpublished thesis, Karnataka University, Dharvar 1976.
   Kodandaramaiah T. The Telugu poets of Madura and Tanjore-A.P. Sahithya Akademy, Hyderabad, 1975.
7. Krishnasamy Ayyangar S. 'Sources of Vijayanagar History' 1919 University of Madras.
8. Nagam Aiya V. The Travancore State Manual 3 vols-1919.
9. Nelson J.H. 'The Madura Country' 1868.
10. V. Rangachari - Indian Antiquary (1914-17).
11. Sewell, Robert 'A Forgotten Empire' (Vijayanagar) 1900.
12. Wills, Marks,-History of Mysoor, IInd edition 2 vols. 1869.
13. Sathyanatha Aiyar, History of Madura Nayaks.
14. *கோவிந்தராசனார், திருமலை நாயக்கர் வரலாறு, கோபாலகிருஷ்ண கோன் வெளியீடு, மதுரை 1922.*
15. *பரந்தாமனார், அ.கி. 'மதுரை நாயக்கர் வரலாறு', அல்லி நிலையம், சென்னை-1960.*
16. Rajaram, History of Tirumalai Nayak Ints. Madurai 1982.

★

திருமலை நாயக்கரைப் பற்றிய முடிவுகள்

"திருமலையைத் தம் முன்னோர் பின்னோர் புகழனைத்தையும் தம்புகழாக்கிக் கொண்டார் என்றுதான் கூறிப்பாராட்ட வேண்டும். கலைமதுரைத் திருநகர் இருக்கும் வரைக்கும் மலிபுகழ் மன்னர் திருமலையின் பெருமை விண்மீன்போல் மண்மிசை ஒளிவீசிக்கொண்டிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை."

அ. கி. பரந்தாமனார் - 1960

"The praises of chronicles, the exploits of kings like Ranga 'krishna' Muthuvirappa, the works of Tirumal Naik and Mangammal are even now existing proofs of a prosperous kingdom and a resourceful people .... No sovereign of the Madura line, except Visvanatha I and Tirumal Naik, has gained such a lasting remembrance in the memory of mankind (as Mangammal)".

V. Rangachari-1916 A.D.

'The greatness of Tirumala Nayaka is writ large in tradition and to some extent in the architectural survival of the present day .... Tirumala was great, atleast in the sense that Louis XIV was one of the greatest sovereigns of Europe .... A Jesuit letter of January 1709 says that on the death of Tirumala a temple was erected and he was worshipped. There is no doubt that Tirumala Nayaka left a strong impression on the minds of his subjects and contemporaries. As. Dr. Vincent A. Smith says of Akbar, Tirumala's defects can only be regarded as 'spots on the sun'.

R. Sathaynatha Aiyar-1924 A.D.

அரண்மனை அரும்பொருட் காட்சியகம்

திருமலைநாயக்கர் அரண்மனையில் அமைக்கப்பட்டிருக்கும் கண்காட்சியில், பின்வரும் தலைப்புக்களின்கீழ் காட்சி அமைக்கப்பட்டுத் திருமலைமன்னரின் காலமும் பெருமையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

வரலாறு	சமயமும், கலையும்
இலக்கியம்	வெளிநாட்டு உறவு
செப்பேடுகள்	ஆடையும், அணிகலன்களும்
காசுகள்	ஓலைச்சுவடிகள்
கல்வெட்டுகள்	

திருமலைநாயக்கரின் உருவச்சிலைகள் உள்ள இடங்கள் அவர் கட்டிய கட்டிடங்கள், செய்தளித்த கலைப்பொருட்கள், நாயக்கர் காலத்தில் மதுரைக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட ஆபரணங்கள், ஆடைகள் ஆகியவை புகைப்படங்களாக இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

திருமலைநாயக்கர் காலத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த டச்சுக்காரர், போர்ச்சுக்கீசியர், மதத்தொண்டு புரியவந்த பாதிரிமார் பற்றிய செய்திகளும், இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. திருமலை நாயக்கரை நேரில் பேட்டி கண்ட இராபர்ட்-டி நொபிலி, வைக்கோபாதிரியார் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இக்காட்சி விளக்கி நிற்கின்றது.

திருமலைமன்னர் வரலாற்றிற்கு ஆதாரமாக விளங்கும் அவர் காலத்தில் வெளியிட்ட காண்பதற்கு அரிய பல செப்புப் பட்டயங்களும், அவற்றின் நகல்களும் இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. திருமலைமன்னர் வாழ்வில் நிகழ்ந்த பல சுவை யான நிகழ்ச்சிகளைத் தருபவை இச்செப்பேடுகளாகும். மேலும் திருமலைமன்னர் வெளியிட்டுள்ள காசுகளையும் அவர் தலை முறையினர் வெளியிட்ட காசுகளையும் இக்கண்காட்சியில் காணலாம்.

திருமலைமன்னர் காலத்தில் குமரகுருபரர், பிள்ளைப்பெரு மாள் அய்யங்கார் போன்ற பெருந்தமிழ்ப் புலவர்களும் பல வாய்மொழி இலக்கிய ஆசிரியர்களும் வாழ்ந்துள்ளனர். அன்று அவர்கள் ஓலைச்சுவடிகளில் வடித்து வைத்த இலக்கியங்களும் இக்காட்சியில் பார்வைக்கு இடம்பெற்றுள்ளன.

திருமலைமன்னர் தன்னாட்டில் செய்த அறக்கொடை களும், திருப்பணிகளும் பல. அவை பாண்டியநாட்டிலும், கொங்குநாட்டிலும், சோழநாட்டிலும் ஆங்காங்கே கல்வெட்டுக் களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பல படி யெடுத்து வரப்பெற்று இக்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இதுபோன்று திருமலைநாயக்கரைப் பற்றிய இன்னும் பல செய்திகள் இக்காட்சியில் காணலாம். மேலும் இவ்வரும்பொருட் காட்சியகத்தில் சிற்பப்பிரிவும், முற்கால வரலாற்றுத் தொல் பொருள் பிரிவும், பிற பிரிவுகளும் உள்ளன.

சிற்பப் பிரிவு

இப்பிரிவில் சுடுமண் உருவங்களும், சுதை உருவங்களும் வைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த கொந்தகை என்ற ஊரில் கிடைத்த கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சுடுமண் உருவங்கள் இக்காட்சியில்

இடம்பெற்றுள்ளன. இதேபோன்று தமிழ்நாட்டில் நாயக்கர் காலத்தில் அமைக்கப்பெற்ற சுதை உருவங்களும் இக்காட்சி இங்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வரும்பொருட் காட்சியகம் தென் தமிழ்நாட்டில் காணப்படும் சிறப்புள்ள கற்சிற்பங்களைக்கொண்டு விளங்குகின்றது. இலண்டன் மாநகரில் நடைபெற்ற இந்தியக் கண்காட்சி விழாவிற்கு இங்கிருந்த பல்லவர் காலத்தினைச் சார்ந்த பாச்சூர் சிவன்-பார்வதி சிற்பம் ஒன்று கொண்டு செல்லப்பெற்று திரும்பி வந்துள்ளது. இப்பல்லவர் சிற்பங்களைத் தவிர பாண்டியர் சிற்பக்கலையை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த பல அரிய சிற்பங்களும் இவ்வருங்காட்சியகத்தில் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம் இராஜாக்கள் மங்கலம் என்ற இடத்திலிருந்து எடுத்துவரப்பெற்ற கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த அபயமளிக்கும் நரசிம்மர் சிற்பமும், திசையணங்குகளின் சிற்பமும் இவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்தவையாகும். இவை தவிர 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சாம்பவர் வடகரை திருமால், பூதேவி ஆகியோரது சிற்பங்களையும், பொய்கை காட்டிலிருந்து எடுத்து வரப்பெற்ற சப்தமாதர்கள் உருவம் கீழ்மாத்தூரிலிருந்து எடுத்து வரப்பெற்ற விஷ்ணு, சிவன், சாமுண்டா, துர்க்கை ஆகியோரது சிற்பங்களையும் இச்சிற்பப் பிரிவில் காணலாம். மேலும் பாண்டிய நாட்டில் சமணமும் பௌத்தமும் சிறப்புடன் விளங்கியமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் மகாவீரர், பார்சுவநாதர், புத்தர் ஆகியோரது சிற்பங்களும் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இவை முற்காலப் பாண்டியர் சிற்பக்கலையை எடுத்துக் காட்டும் வகையில் உள்ளன. பதினெட்டாம் குடியைச் சார்ந்த

ஆறுமுகன், ஆழூரைச் சார்ந்த விஷ்ணு, ஸ்ரீதேவி, விளாத்தி குளத்தினைச் சார்ந்த இபக்கிஅம்பிகா ஆகியோரது உருவங்களும் இச்சிற்பப் பிரிவில் இடம் பெற்றுள்ளன.

பாண்டியர்காலச் சிற்பக்கலை சோழர்காலச் சிற்பக் கலையோடு ஒப்பிட்டுக் காட்டும் வகையில் முற்கால, பிற்காலச் சோழர்காலச் சிற்பங்களும் இக்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் திருவீராமீஸ்வரம் கங்காளமூர்த்தியின் உருவமும், உலகாபுரத்தினைச் சார்ந்த பைரவர் சிற்பமும், அச்சிறுபாக்கத்தினைச் சார்ந்த பார்வதியின் சிற்பமும், ஆலம்பாக்கத்தினைச் சார்ந்த சண்டிகேஸ்வரர் உருவமும் சிறப்புவாய்ந்தவையாகும். மேலும் சில நாயக்கர் காலச்சிற்பங்களும் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இவற்றில் உழவாரப்படையோடு எப்போதும் காட்சியளிக்கும் அப்பர் பெருமான், தலையில் தீபத்தினை ஏந்திய நிலையில் காணப்படும் சிற்பம் குறிப்பிடத்தக்க தாகும்.

வரலாற்றிற்கு முற்பட்ட காலப்பிரிவு

பாண்டிய நாட்டின் தொன்மையை எடுத்துக்காட்டும் வகையில் துவரிமான் என்ற இடத்தில் கிடைக்கப்பெற்ற 2500 ஆண்டுகட்டு முற்பட்ட நுண்கற்காலக் கற்கருவிகளும், புதிய கற்காலக் கல் கோடரிகளும் இப்பிரிவில் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன. மேலும் பெருங்கற்கால மனிதர்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பதனை எடுத்துக்காட்டும் வகையில் அவர்கள் பயன்படுத்திய இரும்புக்கருவிகளும், கறுப்பு சிவப்பு மட்கலன்களும் இப்பிரிவில் இடம்பெற்றுள்ளன. இக்கால மனிதன் இறந்தவர்களைப் புதைக்கப் பயன்படுத்திய முதுமக்கள் தாழிகளையும் இங்கு காணலாம்.

பிற பிரிவுகள்

மேற்கண்ட அரும்பொருட்களைத் தவிர தமிழ்நாட்டில் காணப்படும் பழங்காலத்து ஒவியங்களின் நகல்களும் திருமலை நாயக்கர் மகாலின் பழையகாலத்துத் தோற்றப் படங்களும் இவ்வருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இவ்வரும்பொருட் காட்சியகத்தினைச் சிறப்பு வாய்ந்ததாக ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மேற்கொண்டு வருகிறது.

★